Koviloor Digital Library

மகரிஷி ஸ்ரீவால்மீகி அருளிய

# ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம்

## சுந்தர காண்டம் — யுத்த காண்டம்
## உத்தர காண்டம்

## தமிழ் மொழிபெயர்ப்பு - இரண்டாம் பாகம்

श्रीमद्वाल्मीकीयरामायणम् ( सुन्दरकाण्डसे उत्तरकाण्डतक ) पार्ट –२ (तमिल)



ஸ்ரீராமபிரானின் அரசவை

ACC. No. 30624
124

गीताप्रेस गोरखपुर
GITA PRESS, GORAKHPUR

கீதா பிரஸ், கோரக்பூர்

Koviloor Digital Library

Koviloor Digital Library

18-6

II ஸ்ரீஹரி: II

1962

# ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம்

## சுந்தர காண்டம் – யுத்த காண்டம் – உத்தர காண்டம்

## தமிழ் மொழிபெயர்ப்பு – இரண்டாம் பாகம்

श्रीमद्वाल्मीकीयरामायणम् ( सुन्दरकाण्डसे उत्तरकाण्डतक ) पार्ट - २ ( तमिल )

த்வமேவ மாதா ச பிதா த்வமேவ
த்வமேவ ப3ந்து4ஶ்ச ஸகா2 த்வமேவ ।
த்வமேவ வித்3யா த்3ரவிணம் த்வமேவ
த்வமேவ ஸர்வம் மம தே3வதே3வ ॥

ஆருயிர் அன்னையும் நீயே, அருமைத் தந்தையும் நீயே,
உறவும் சுற்றமும் நீயே, உற்ற நண்பனும் நீயே,
கற்கும் கல்வியும் நீயே, சேர்க்கும் செல்வமும் நீயே,
அனைத்தும் ஆன என்றன் ஆதிதேவனும் நீயே!

COIMBATORE
PH : 99431 12202

**Translated by:**

**Pandit T.S.Kothandaraman**

KOVILOOR ANDAVAR LIBRARY KOVILOOR
30624

கீதா பிரஸ், கோரக்பூர் – 273 005. (உ.பி.)

Koviloor Digital Library

*Books are also available at—*

1.Gita Press Sales Depot
Gita Press Mansion, 8/1M, Racecourse
COIMBATORE — 641018 ✆ 0422-3202521

2.Gita Press Gorakhpur Book Shop
Electro House N0. 23, Ramanathan Street, Kilpauk
CHENNAI — 600010 ✆ (044) 26615959; Fax 26615909

Second Reprint 2015 3,000
Total 5,500

❖ **Price : ₹ 190**
**(One Hundred and Ninety Rupees only)**

Printed & Published by :

**Gita Press, Gorakhpur—273005 (INDIA)**
(a unit of Gobind Bhavan-Karyalaya, Kolkata)
Phone - (0551) 2334721, 2331250; Fax : (0551) 2336997
e-mail : **booksales@gitapress.org** website : **www.gitapress.org**

Koviloor Digital Library



॥ ஸ்ரீஹரி: ॥

॥ ஓம் ஸ்ரீ பரமாத்மநே நம: ॥

# பதிப்பாளர் உரை

*சரிதம் ரகுநாதஸ்ய ஶதகோடிப்ரவிஸ்தரம் ।*
*ஏகைகமக்ஷரம் ப்ரோக்தம் மஹாபாதகநாஶநம் ॥*

இராமபிரானுடைய பெருங்கருணையால், ஸ்ரீமத் வால்மீகி ராமாயணத்தின் (தமிழ் மொழிபெயர்ப்பு) (சுந்தர காண்டம் – யுத்த காண்டம் – உத்தர காண்டம்) இரண்டாம் பாகமாகிய இந்நூல், தற்போது தங்கள் திருக்கரங்களில் வண்ணமிகு மலராக நறுமணம் வீசித் திகழ்கிறது.

ஒவ்வொரு காண்டத்திற்கும் தனித்தனியே பலன்கள் கூறப்பட்டுள்ளன. என்றாலும், சுந்தர காண்ட பாராயணத்தால் அடையப்பட முடியாதது எதுவுமேயில்லை என்ற நம்பிக்கை வேரூன்றியிருக்கிறது. சுந்தர காண்டத்தின் பெருமை அளவிட முடியாதது!

அனுமானுடைய ஆற்றல், அறிவு, செயல்திறன், இராமபக்தி, சளைக்காமல் முயலுதல், அத்துடன் தன்னடக்கம் போன்ற பல உயர்குணங்கள், சுந்தர காண்டத்தில்தான் முழுமையாக வெளிப்படுகின்றன. அசோகவனத்தில் சீதாப்பிராட்டியின் நிலையைக் கண்டு, துயரப்படாதவர்கள் யார்தான் இருக்க முடியும்? இராம–சுக்ரீவ நட்பின் ஆழத்தையும் சுந்தர காண்டத்தில் காண முடிகிறது.

அனுமான் – சமுத்திரத்தைத் தாண்டுதல், சீதையை இலங்கையில் தேடுதல், இராவணனின் மாளிகையில் தேடுதல், மண்டோதரியைப் பார்த்தல், அசோகவனத்தில் தேடுதல், சீதாப்பிராட்டியைக் காணுதல், சீதாதேவியுடன் பேச ஆரம்பித்தல், சீதாப்பிராட்டியிடம் கணையாழியைக் கொடுத்தல், சீதையிடம் விடைபெற்ற பின்னர் பூஞ்சோலையையும் தேவாலய மதிற்சுவர்களையும் அழித்தல், ஜம்புமாலி–அக்ஷகுமாரர்களை வதம் செய்தல் ஆகிய நிகழ்வுகளும், இந்திரஜித் அனுமனைத் தாக்குதல், இராவணனின் அரசவையில் அனுமான், அனுமன் இலங்கையை எரித்தல், இலங்கையிலிருந்து திரும்புதல், இராமனிடம் சூடாமணியைக் கொடுத்தல், ஜானகிதேவி கூறியனுப்பிய செய்தியை இராமன் கேட்பது போன்ற பல முக்கிய நிகழ்வுகளுடன் அமைந்தது சுந்தர காண்டம்.

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணத்தில் மிகப்பெரிய காண்டமாக விளங்குவது, யுத்த காண்டம். பெயருக்கேற்ப, இந்த காண்டத்தில் போர்க்காட்சிகளே நிறைந்துள்ளன.

'அந்தக் காலத்திய போர்களில் என்னென்ன அஸ்திர–சஸ்திரங்களை உபயோகித்திருக்கப் போகிறார்கள்? வலுவான தண்டம், அம்பு, வேல், சூலம், கத்தி, கதை, கற்கள் போன்ற பழமையான தாக்குதல் கருவிகளையே உபயோகப்படுத்தியிருப்பார்கள்!' என்று எண்ணிவிட வேண்டாம்.

அது, தவம் செய்து மந்திர சக்திகள் பெற்றவர்கள் மிகுந்திருந்த காலம். மனிதர், அரக்கர், அசுரர், வானரர் போன்ற எல்லோரிடமும் தவ ஆற்றல் இருந்தது. அதனால், கையால் எறியப்படும் ஆயுதங்களைக் காட்டிலும், மந்திர சக்தியால் இயக்கப்படும் சஸ்திரங்களையே அதிகமாகப் பயன்படுத்தியிருப்பார்கள் என்ற எண்ணமும் சரியானதல்ல.

வால்மீகி முனிவர், போர்க்களங்களில் உபயோகப்படுத்தப்பட்ட ஆயுதங்களைப் பற்றியும் அவைகளின் செயல்திறன் பற்றியும் விரிவாகவே வர்ணித்திருக்கிறார். போர்க்கலைப்

Koviloor Digital Library



பயிற்சியும் ஆயுதப்பயிற்சியும் முறையாகவே பயிலப்பட்டன என்பதில் சிறிதும் ஐயமில்லை. அத்துடன் போர்க்களத்தில்கூட அறநெறிகள் பின்பற்றப்பட்டன என்பதையும் கண்டு வியக்கிறோம்!

யுத்தக்காட்சிகள் என்றால் என்ன? 'இவன், அவனைத் தாக்கினான்; அவன், இவனைத் தாக்கினான்' என்ற படப்பிடிப்புத் தானே? வெவ்வேறு வீரர்கள் போர் செய்யும் காட்சிகளைத் திரும்பத் திரும்ப, நாம் படிக்க நேர்ந்தால் அலுப்புத் தட்டிவிடாதா? போர்க்களத்தில், கொலைவெறித் தாக்குதல், தேர் முறிதல், யானை–குதிரைகளின் கோரமான பாய்ச்சல்கள், ரத்தப்பெருக்குடன் மிதக்கும் சடலங்கள் – இவைகளைத்தானே காண முடியும்? சுவையான வேறு நிகழ்ச்சிகளுக்கு இடம் ஏது? என்பது பாமரத்தனமான சிந்தனை.

ஆதிகவி வால்மீகி பகவான், வெறும் அடிதடியை மட்டும் எழுதி வைத்துவிட்டுப் போகவில்லை. போர்க்களத்தில் எவ்வளவு உத்திகள் உண்டோ, அவைகளையெல்லாம் இப்போது நம் கண்ணெதிரில் நடக்கும் நிகழ்ச்சிபோல உயிர்த்துடிப்புடன் விவரித்திருக்கிறார். 'அரக்கத் தலைவர்களும் வானரத் தலைவர்களும் மிகக்கடுமையாகப் போர் புரிந்தார்கள் என்று மட்டும் எழுதியிருந்தால், அது ஒரு குறையாகவே இதுநாள் வரை பேசப்பட்டிருக்கும். ஆனால், துவந்துவ யுத்தங்கள் நடக்கும்போது, படிப்போரின் மனத்தில் பரபரப்பையும், பேராவலையும், 'அடுத்து என்ன நிகழுமோ?' என்ற பதற்றத்தையும் தோற்றுவிக்கும்வண்ணம், தான் ஞானக்கண்ணால் கண்ட காட்சிகளை, பல நூற்றாண்டுகளுக்குப் பின்னரும் அனுபவிக்கக்கூடிய விதத்தில் மிகத் தத்ரூபமாக எழுதியிருக்கிறார்!

அதனால்தான் போர்க்களத்தில் ஒவ்வொரு முனையிலும் நடைபெறும் யுத்தக் காட்சிகளைப் படித்துப் படித்து, புதிய உணர்ச்சிகளை அனுபவிக்க முடிகிறது.

இலங்கையை நோக்கிப் புறப்படுதல், இராவணனுக்கு விபீஷணனின் நல்லுபதேசம், விபீஷணன் இராமனிடம் சரணடைதல், 'சேதுபாலம்' கட்டுதல், இலங்கையின் மீது முற்றுகை, போர்க்களக் காட்சிகள், தூம்ராட்சன்–வஜ்ரதம்ஷ்ட்ரன்–அகம்பனன்–பிரஹஸ்தன்–கும்பகர்ணன்–நராந்தகன்–அதிகாயன் போன்றவர்கள் வதம், இந்திரஜித்தின் மாயப்போர், நிகும்பன்–மகராக்ஷன் வதம், இந்திரஜித் மாண்டு போதல், விரூபாக்ஷன்–மகாபார்சுவன் வதம், இராம–இராவணப் போர், இராவணனுடைய தலைகளைத் துண்டித்தல், இராவண வதம், விபீஷணனுக்கு முடிசூட்டுதல், சீதாதேவியின் அக்னிப் பிரவேசம், பரதன்–அனுமான் சந்திப்பு, இராம–லட்சுமண–பரத–சத்ருக்னர்கள் சந்திப்பு, இராமனுக்குத் திருமுடி சூட்டுதல் போன்ற பல நிகழ்வுகள் யுத்த காண்டத்தின் காட்சிகள்.

யுத்த காண்டத்தின் முடிவில், இராம பட்டாபிஷேகம் என்ற மங்களகரமான நிகழ்ச்சி நிறைவேறியபின், பட்டாபிஷேகத்தைக் காண்பதற்காக வந்திருந்த அரக்க–வானரத் தலைவர்கள் தகுந்த முறையில் கௌரவிக்கப்படுகிறார்கள்; பின்னர், அவர்கள் இராமனின் அனுமதியைப் பெற்று, தத்தம் நாடுகளுக்குச் செல்கிறார்கள் என்று கூறியிருக்கிறார், வால்மீகி.

யுத்த காண்டத்தைத் தொடர்ந்து 'உத்தர காண்டம்' என்ற பகுதி இருப்பதைக்கூட பல அன்பர்கள் கவனித்ததில்லை. உத்தர காண்டத்தில் அப்படி என்ன அற்புதமான நிகழ்ச்சிகள் இருக்கின்றன?

வானரர்–கரடி–அரக்கர்களின் பிறப்பு பற்றிய தேவரகசியங்கள் கூறப்பட்டிருக்கின்றன. பின்பு சீதாப்பிராட்டியைக் காட்டில் கொண்டு விடுகிற மனத்தை வருத்தக் கூடிய நிகழ்ச்சி. நிறைவாக, இராமபிரானே சரயூ நதியில் தன் பாதம் பதித்து, பின் ஸ்ரீமகாவிஷ்ணுவின் உடல் புகுதல் போன்ற காட்சி – இந்த நிகழ்வுகளைப் படித்துத்தான் ஆகவேண்டுமா?

Koviloor Digital Library



கோலாகலமான இராம பட்டாபிஷேகத்தோடு இராம அவதார காதையை முடித்தால் எவ்வளவு பேரானந்தமாக இருக்கும்!

– இம்மாதிரியான வாதங்களுக்கு என்னதான் பதில் சொல்ல முடியும்?

அரக்கர் குலத்தின் வரலாறு, இராவணன் முதலியோர் பிறப்பும் வரம்பெறுதலும், இராவணன் இலங்கையை அடைதல், இராவணன் புஷ்பக விமானத்தைக் கவர்ந்து செல்லுதல், வேதவதி கொடுத்த சாபம், யமனையும் வருணனையும் இராவணன் வெற்றி கொள்ளுதல், தேவலோகத்தின் மீது படையெடுத்தல், இந்திரன் தோற்றதற்கான காரணம், இராவணன் சிவபிரானை ஆராதித்தல், வாலி–இராவணன் நட்பு, அனுமான் பிறப்பு, அரசவையில் இராமன், சீதாதேவியை வனத்தில் கொண்டு விடுதல், குச–லவர்கள் பிறப்பு, அசுவமேத யாகம் செய்ய இராமன் ஆணையிடுதல், இராமாயண அரங்கேற்றம், அன்னை சீதை ரஸாதலம் புகுதல், இராமனைச் சந்திக்க காலன் வருதல், இராமன் இலக்குவனைத் துறத்தல், குச–லவர்களுக்குப் பட்டம் சூட்டுதல், இராமன் திருநாட்டுக்குப் புறப்படுதல், இராமன் பரமபதம் எழுந்தருளல், இராமாயண மகிமை போன்ற பல நிகழ்வுகள் – உத்தர காண்டக் காட்சிகள்.

உத்தர காண்டத்தில் எண்ணற்ற செய்திகள் இருக்கின்றன. அவைகளையும் படித்துத் தெரிந்துகொண்டால்தான், நாம் இராமாயணம் முழுவதையும் படித்து நிறைவு செய்ததாக ஆகும்.

தரையைப் பிளந்து கொண்டு பூமிதேவியே வந்து, தன் மகள் சீதையை அழைத்துச் சென்ற காட்சி வருணனைகளைப் படிக்கும்போது, வாசகரின் கண்களில் 'உலகநாயகியான மகாலட்சுமியே மெய்யுருவாகக் காட்சி தருகிறாள்' என்பதை அனுபவபூர்வமாக, நாம் உணரலாம்.

இராமனுடைய வழித்தோன்றல்கள் பற்றிய செய்திகள் நெறிபிறழாமல் கூறப்பட்டுள்ளதைக் கண்டு வியப்புத் தோன்றுகிறது!

இராமபிரான் தன்னந்தனியனாக, சரயூ நதியின் வழியே திருநாட்டுக்கு எழுந்தருளி விடவில்லை. தன்னுடன் வாழ்ந்திருந்த புல்–பூண்டு முதல் மற்ற அனைத்தையும் உடன் அழைத்துச் சென்றார். தன்னோடு அழைத்துச் சென்றவர்களுக்காக ***'ஸாந்தாநிகம்'*** என்ற தனியானதொரு தெய்விகத் திருநாட்டை உண்டாக்கிக் கொடுத்தார்.

காவிய நாயகன் இராமனுக்கு நிகரான கருணை வள்ளலைக் காண்பதரிது. அந்த வள்ளன்மையை, உத்தர காண்டம் தெள்ளத்தெளிவாக விளக்கிக் காட்டுகிறது. உத்தர காண்டம் ***'உத்தம காண்டம்'*** என்று போற்றத்தக்கது!

***வேத₃வேத்₃யே பரே பும்ஸி ஜாதே த₃ஶரத₂ாத்மஜே ।***
***வேத₃: ப்ராசேதஸாத₃ாஸீத் ஸாக்ஷாத்₃ராமாயணாத்மநா ॥***

சொல்–வாக்குக் கடந்த பரம்பொருள், சக்கரவர்த்தித் திருமகனாக அவதாரம் செய்ததும், வால்மீகியின் வாக்கில் வேதமே இராமாயணமாக வெளிவந்தது. ஞானத் தராசில், வேதமும் இராமாயணமும் சமநிலை!

எமது பதிப்பகம், தமிழ்கூறு நல்லுலகம் உய்ய வேண்டி, ஸ்ரீமத் வால்மீகி ராமாயணத்தை (தமிழ் மூலம் – மொழிபெயர்ப்பு) வெளியிட வேண்டும் என்று திட்டமிட்டு, பரமகருணா மூர்த்தியான இராமப்பிரபுவின் அருளினால் இம்மாபெரும் புனிதப்பணி நிறைவடைந்து, ஐந்து பாகங்களாக (1. பால காண்டம்–அயோத்தியா காண்டம்; 2. ஆரண்ய காண்டம்–கிஷ்கிந்தா காண்டம்; 3. சுந்தர காண்டம்; 4. யுத்த காண்டம்; 5. உத்தர காண்டம்) ஏற்கனவே வெளியிடப்பட்டு, ஆன்மிக அன்பர்களின் மிகுந்த வரவேற்பைப் பெற்றுள்ளது.

Koviloor Digital Library



மேலும், ஸ்ரீமத் வால்மீகி ராமாயணத்தின் தமிழ் மொழிபெயர்ப்பை மட்டும் விரும்பும் தமிழ்கூறு நல்லுலக ஆன்மிக அன்பர்களுக்காகவே இரண்டு பாகங்களை (***முதல் பாகம் :*** பால காண்டம், அயோத்தியா காண்டம், ஆரண்ய காண்டம், கிஷ்கிந்தா காண்டம்; ***இரண்டாம் பாகம் :*** சுந்தர காண்டம், யுத்த காண்டம், உத்தர காண்டம்) கொண்ட இக்காவியத்தை வெளியிடுவதற்கு, எமக்கு அருள்புரிந்த ஸ்ரீராமசந்திரமூர்த்தியின் கருணைக்குத்தான் எல்லையேது.

இராமபிரானுடைய பரம கிருபையால் இராமாயணப் பேராறு, சூரிய–சந்திரர் உள்ள வரையில் வற்றாமல் ஓடிக் கொண்டிருக்கும் என்பதில் சிறிதும் ஐயமில்லை!

பால காண்டம் தொடங்கி, உத்தர காண்டம் வரை இராமாயணத்தைப் படித்து, தாரக மந்திர வடிவினரான ஸ்ரீராமசந்திரமூர்த்தியின் நல்லருளைப் பெற்று உய்வோமாக. இராமன் திருவடிகளில் புகலடைந்துள்ள நம் அனைவரையும் அவர் காத்து ரட்சிப்பாராக.

அனைத்து நலன்களையும் அருளவல்ல இந்தப் புனித நூலை, அன்பர்கள் அனைவரும் படித்துப் பயன்பெற வேண்டும் என்பதே எங்கள் விருப்பம். அவ்விருப்பத்திற்கேற்ப, எங்களுக்கு இப்புனித காவியத்தை மிகத்தெள்ளிய நடையில் பசுமை மாறாமல் தமிழில் மொழிபெயர்ப்புச் செய்தருளிய, எமது வணக்கத்திற்குரிய ***சென்னை, (அமரர்) பண்டிட் டி.எஸ். கோதண்டராமன்*** அவர்களுக்கு, ஸ்ரீராமசந்திரமூர்த்தியின் பேரருள் கிடைக்கப் பிரார்த்திக்கிறோம்.

ஸ்ரீராமப்பிரபுவின் அடியார்களின் திருவடிகளுக்கு எமது சிரந்தாழ்ந்த வணக்கங்கள்.

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணத்தைப் படிப்போர் அனைவருக்கும் ஸ்ரீராமசந்திரமூர்த்தியின் பேரருள் கிடைக்க வேண்டும் என உள்ளன்போடு பிரார்த்திக்கிறோம்.

**ஜெய் ஸ்ரீராம்!**

***கோ³ஷ்பதீ³க்ருதவாராஶிம் மஶகீக்ருத ராக்ஷஸம் ।***
***ராமாயணமஹாமாலாரத்நம் வந்தே³ऽநிலாத்மஜம் ॥***

**'சீதா–லட்சுமண–ஹனுமத் சமேத ஸ்ரீராமனுக்கு ஜெய்!'**

**— பதிப்பாளர்கள்**

Koviloor Digital Library

॥ ஸ்ரீஹரி: ॥

# தேவநாகரி எழுத்துக்கள் — சில குறிப்புகள்

ஒரு மொழியின் சொல்லை இன்னொரு மொழியின் எழுத்துக்களால் எழுதுவதை எழுத்துப்பெயர்ப்பு **(Transliteration)** என்று அழைக்கிறோம். ஒரு மொழியிலுள்ள சொல்லின் பொருளை மற்றொரு மொழியில் கூறுவதை மொழிபெயர்ப்பு **(Translation)** என்று அழைக்கிறோம்.

சம்ஸ்கிருதச் சொற்களைப் பிழையின்றி உச்சரிக்க, முறையாக சம்ஸ்கிருதம் கற்றவர்களிடமிருந்து அறிந்துகொள்ள முயற்சிக்க வேண்டும்.

ஆங்கில எழுத்துக்களின் துணைகொண்டு *2, 3, 4* என்னும் குறியீடுகளுடன் சம்ஸ்கிருத எழுத்துக்களுக்கு நிகரான தமிழ் ஒலி வடிவங்கள் இங்கு தரப்பட்டுள்ளன.

| | | | | |
|---|---|---|---|---|
| अ அ | आ ஆ | इ இ | ई ஈ | उ உ |
| ऊ ஊ | ऋ ரி | ॠ ரீ | ऌ ல்ரு | ए ஏ |
| ऐ ஐ | ओ ஓ | औ ஔ | | |

| | | | | |
|---|---|---|---|---|
| क க [ka] | ख $க_2$ [kka] | ग $க_3$ [ga] | घ $க_4$ [gha] | ङ ங |
| च ச [ca] | छ $ச_2$ [cha] | ज ஜ [ja] | झ ஜ [jha] | ञ ஞ |
| ट ட [ta] | ठ $ட_2$ [tta] | ड $ட_3$ [da] | ढ $ட_4$ [dda] | ण ண |
| त த [tha] | थ $த_2$ [thha] | द $த_3$ [dha] | ध $த_4$ [dhha] | न ந, ன |
| प ப [pa] | फ $ப_2$ [pha] | ब $ப_3$ [ba] | भ $ப_4$ [bha] | म ம |
| य ய | र ர | ल ல | व வ | |
| स ஸ [sa] | ष ஷ [sha] | क्ष க்ஷ [ksha] | ह ஹ [ha] | |
| श ஶ [sa] | ज्ञ க்ஞ [gna] | ऋ ரு [ri] | | |

'श' என்ற எழுத்து *'ஶ'* என்று எழுத்துப்பெயர்ப்பு செய்யப்பட்டுள்ளது. இந்த *'ஶ'* என்னும் எழுத்து *'பிசகு', 'கசடு'* என்னும் சொற்களில் வரும் *'ச'*வைப் போன்று ஒலிக்கும்.

சம்ஸ்கிருத–தமிழ் எழுத்துப்பெயர்ப்பில் **(Transliteration)** கொடுத்துள்ள எழுத்துக்கள் எழுத்துப்பெயர்ப்பில் மட்டும் பயன்படுத்தப்பட்டுள்ளன. மொழிபெயர்ப்பில், வழக்கத்தில் உள்ள தமிழ் எழுத்துக்களே பயன்படுத்தப்பட்டுள்ளன. உதாரணமாக 'सुखं' என்ற சொல் எழுத்துப்பெயர்ப்பில் *'ஸுகம்'* என்றும், மொழிபெயர்ப்பில் *'சுகம்'* என்றும் எழுதப்பட்டுள்ளது.

Koviloor Digital Library



சம்ஸ்கிருதத்தில் உள்ள உயிரெழுத்தான 'ऋ' என்பது உயிரெழுத்தாக வரும்பொழுது 'ரி' என்றும், உயிர்மெய்யெழுத்தாக வரும்பொழுது 'ரு' என்றும் உச்சரிக்கப்படுகிறது. (உ–ம்.:– ऋषि – ரிஷி, कृत्वा – க்ருத்வா) இந்த 'ரு' என்னும் எழுத்து 'எருது', 'விருது' என்னும் சொற்களில் வரும் 'ரு'வைப் போன்று ஒலிக்கும்.

'ञ' என்ற எழுத்து 'ஞ' என்றும், 'ज्ञ' என்ற கூட்டெழுத்து 'க்ஞ' என்றும் எழுத்துப்பெயர்ப்பு செய்யப்பட்டுள்ளன. 'ञ' என்ற எழுத்தில் துவங்கும் சொற்களில்லை.

ஒரு சொல்லிற்கு மேல் இருக்கின்ற புள்ளியானது 'ம்' என்னும் எழுத்தைக் குறிக்கிறது. (உ–ம்.:– सुखं – ஸுகம்)

ஒரு சொல்லின் இறுதியில் மேலும் கீழும் வருகின்ற இரு புள்ளிகள் (:) 'விஸர்கம்' என்று அழைக்கப்படுகிறது. இதன் உச்சரிப்பு, இதற்கு முன் வரும் எழுத்தைப் பொறுத்து அமையும். உதாரணம் பின்வருமாறு :–

| | | | | |
|---|---|---|---|---|
| भवन्तः | – | ப$_4$வந்த: | – | ப$_4$வந்தஹ |
| स्थितिः | – | ஸ்தி$_2$தி: | – | ஸ்தி$_2$திஹி |
| प्रभुः | – | ப்ரபு$_4$: | – | ப்ரபு$_4$ஹு |
| गुणैः | – | கு$_3$ணை: | – | கு$_3$ணைஹி |
| भ्रुवोः | – | ப்$_4$ருவோ: | – | ப்$_4$ருவோஹோ |

சம்ஸ்கிருதச் சுலோகங்களில் சில இடங்களில் 'ऽ' அல்லது 'ऽऽ' என்னும் குறியீடுகளைக் காணலாம். இதற்கு 'அவக்$_3$ரஹம்' என்று பெயர். இந்த இடங்களில் முறையே 'அ', 'ஆ' என்னும் எழுத்துக்கள் தொக்கி நிற்கின்றன என்று பொருள் கொள்க.

## ஜெய் ஸ்ரீராம்

ஸுந்தரே ஸுந்தரோ ராம: ஸுந்தரே ஸுந்தரீ கதா ।
ஸுந்தரே ஸுந்தரீ ஸீதா ஸுந்தரே ஸுந்தரம் வநம் ॥
ஸுந்தரே ஸுந்தரம் காவ்யம் ஸுந்தரே ஸுந்தரோ கபி: ।
ஸுந்தரே ஸுந்தரம் மந்த்ரம் ஸுந்தரே கிம் ந ஸுந்தரம் ॥

*சுந்தர காண்டத்தில் இராமன், சுந்தரன்; கதை, அழகானது; சீதை, பேரழகி; அசோகவனம், வனப்புடையது; காவியம், இனியது; வானரர், அழகர்; சொற்கள், நல்ல பலன்களைக் கொடுக்கும் மந்திரங்கள். சுந்தர காண்டத்தில் எதுதான் அழகில்லாதது?*

Koviloor Digital Library

॥ ஸ்ரீஹரி: ॥

# பொருளடக்கம்


| வரிசை எண் | பொருள் | பக்கம் எண் |
|---|---|---|
| | பதிப்பாளர் உரை | 3 |
| | தேவநாகரி எழுத்துக்கள் – சில குறிப்புகள் | 7 |
| | பொருளடக்கம் | 9 |


## சுந்தர காண்டம்


| ஸர்க்கம் எண் | | |
|---|---|---|
| 1. | அனுமான் சமுத்திரத்தைத் தாண்டுதல் | 19 |
| 2. | இரவில் இலங்கையில் நுழைதல் | 29 |
| 3. | இலங்காதேவியை ஜெயித்தல் | 32 |
| 4. | இலங்கையில் சீதாதேவியைத் தேடுதல் | 35 |
| 5. | மாளிகைகளில் தேடுதல் | 37 |
| 6. | இராவணனின் மாளிகையில் புகுதல் | 39 |
| 7. | புஷ்பக விமானத்தைப் பார்த்தல் | 41 |
| 8. | புஷ்பக விமான வர்ணனை | 43 |
| 9. | இராவணனுடைய அந்தப்புரம் | 44 |
| 10. | மண்டோதரியைக் காணுதல் | 48 |
| 11. | பானசாலையில் தேடுதல் | 51 |
| 12. | மாருதியின் மனக்கலக்கம் | 54 |
| 13. | மாருதியின் மனம் சோர்வடைதல் | 55 |
| 14. | அசோகவனத்தில் தேடுதல் | 59 |
| 15. | சீதையைக் காணுதல் | 62 |
| 16. | சீதையின் நிலையைக் கண்டு வருந்துதல் | 65 |
| 17. | அரக்கிகளைப் பார்த்தல் | 68 |
| 18. | இராவணனின் வருகை | 70 |
| 19. | சீதையை வர்ணித்தல் | 72 |
| 20. | இராவணனின் வேண்டுகோள் | 73 |
| 21. | இராவணனின் வேண்டுகோளை நிராகரித்தல் | 75 |
| 22. | கெடு நிர்ணயித்தல் | 78 |
| 23. | அரக்கிகள், சீதையைத் தூண்டுதல் | 80 |
| 24. | அரக்கிகள் பயமுறுத்துதல் | 82 |
| 25. | சீதை மனம் வருந்துதல் | 84 |

Koviloor Digital Library




| ஸர்க்கம் எண் | பொருள் | பக்கம் எண் |
|---|---|---|
| 26. | உயிரைத் துறக்கத் தீர்மானித்தல் | 85 |
| 27. | திரிஜடையின் கனவு | 88 |
| 28. | சீதை சுருக்குப் போட்டுக் கொள்ள முயலுதல் | 91 |
| 29. | நன்னிமித்தங்களைக் காணுதல் | 93 |
| 30. | அனுமான், தான் செய்யவேண்டியதைப் பற்றி ஆலோசித்தல் | 94 |
| 31. | இராமகதையைக் கூறுதல் | 96 |
| 32. | சீதை, அனுமானைக் காணுதல் | 97 |
| 33. | அனுமானும் சீதையும் பேச ஆரம்பித்தல் | 98 |
| 34. | 'இராவணனோ?' என்ற ஐயத்தை நீக்குதல் | 100 |
| 35. | நம்பிக்கையை உண்டாக்குதல் | 102 |
| 36. | கணையாழியைக் கொடுத்தல் | 108 |
| 37. | சீதை, அனுமானுடன் திரும்பிச் செல்வது உசிதமல்ல – என்பது | 111 |
| 38. | காகம் பற்றிய நிகழ்ச்சியைக் கூறுதல் | 115 |
| 39. | அனுமானுக்குக் கொடுக்கப்பட்ட செய்தி | 119 |
| 40. | அனுமானை அனுப்பி வைத்தல் | 122 |
| 41. | அனுமான், பூஞ்சோலையை அழித்தல் | 124 |
| 42. | கிங்கரர்களைத் துரத்தி அடித்தல் | 125 |
| 43. | தேவாலய மதிற்சுவர்களை அழித்தல் | 128 |
| 44. | ஜம்புமாலியை வதம் செய்தல் | 129 |
| 45. | அமைச்சர்களின் குமாரர்களை வதைத்தல் | 130 |
| 46. | ஐந்து சேனாதிபதிகளை வதைத்தல் | 132 |
| 47. | அக்ஷகுமாரன் வதம் | 134 |
| 48. | இந்திரஜித்தின் தாக்குதல் | 137 |
| 49. | இராவணனின் மகிமையைக் காணுதல் | 141 |
| 50. | பிரஹஸ்தன் விசாரணை | 142 |
| 51. | அனுமானின் அறிவுரை | 143 |
| 52. | தூதனைக் கொல்லக்கூடாது! | 146 |
| 53. | அனுமானின் வாலில் தீ! | 148 |
| 54. | இலங்கையை எரித்தல் | 150 |
| 55. | அனுமானின் குழப்பம் | 153 |
| 56. | அனுமான் திரும்பிச் செல்ல முடிவு | 156 |
| 57. | அனுமான் திரும்பிச் செல்லுதல் | 157 |
| 58. | அனுமான் நிகழ்ந்தவைகளைக் கூறுதல் | 160 |
| 59. | மேலே செய்யவேண்டியதை ஆலோசித்தல் | 169 |

Koviloor Digital Library




| ஸர்க்கம் எண் | பொருள் | பக்கம் எண் |
|---|---|---|
| 60. | அங்கதன்–ஜாம்பவான் தர்க்கம் | 171 |
| 61. | மதுவனத்தை அழித்தல் | 172 |
| 62. | தோட்டக் காவலர்களைப் பயமுறுத்துதல் | 173 |
| 63. | சுக்ரீவன் மகிழ்தல் | 175 |
| 64. | அனுமான் முதலியோர் வருகை | 177 |
| 65. | சூடாமணியைக் கொடுத்தல் | 179 |
| 66. | சீதை கூறியதைக் கேட்பது | 181 |
| 67. | சீதையின் செய்தியை ஏற்பது | 182 |
| 68. | அனுமான் ஆறுதல் கூறியதை ஆமோதித்தல் | 184 |


## யுத்த காண்டம்


| | | |
|---|---|---|
| 1. | ஸ்ரீராமன், அனுமானைப் புகழ்தல் | 187 |
| 2. | சுக்ரீவன், இராமனை உற்சாகப்படுத்துதல் | 188 |
| 3. | இலங்கையின் அரண்கள் | 190 |
| 4. | இலங்கையை நோக்கிப் புறப்படுதல் | 192 |
| 5. | இராமனின் பிரிவாற்றாமை | 199 |
| 6. | இராவணன் மந்திராலோசனை செய்தல் | 200 |
| 7. | அமைச்சர்கள் கூற்று! | 201 |
| 8. | பிரஹஸ்தன் முதலிய அமைச்சர்கள் கூறுவது | 203 |
| 9. | விபீஷணன் கூறுவது | 205 |
| 10. | விபீஷணனின் நல்லுபதேசம் | 206 |
| 11. | மீண்டும் மந்திராலோசனை | 208 |
| 12. | கும்பகர்ணனின் கருத்து | 211 |
| 13. | மகாபார்சுவன் கூறுவது | 214 |
| 14. | பிரஹஸ்தன்–விபீஷணன் விவாதம் | 215 |
| 15. | இந்திரஜித்–விபீஷணன் விவாதம் | 217 |
| 16. | இராவணன், விபீஷணனை நிந்தித்தல் | 218 |
| 17. | விபீஷண சரணாகதி | 220 |
| 18. | விபீஷணனை ஏற்றுக்கொள்ள முடிவு செய்தல் | 225 |
| 19. | தருப்பைப் பாயில்... | 228 |
| 20. | சுக்ரீவனின் மனத்தைக் கலைக்கும் முயற்சி | 230 |
| 21. | கடலரசன் மீது சீற்றம் | 233 |

Koviloor Digital Library




| ஸர்க்கம் எண் | பொருள் | பக்கம் எண் |
|---|---|---|
| 22. | அணை கட்டுதல் | 235 |
| 23. | இலங்கை முற்றுகை | 240 |
| 24. | இராவணன் சபதம் | 241 |
| 25. | சுக–ஸாரணர்கள் வேவு பார்த்தல் | 244 |
| 26. | வானர சேனையைக் காணுதல் | 247 |
| 27. | வானரர்களின் போராற்றல் பற்றிக் கூறுதல் | 249 |
| 28. | வானரப் படையின் மொத்த எண்ணிக்கை | 252 |
| 29. | ஒற்றர்களை அனுப்புதல் | 255 |
| 30. | வானரர் படை | 257 |
| 31. | மாயா இராமனைக் காட்டி, சீதையை வருத்துதல் | 259 |
| 32. | சீதை வருந்துதல் | 262 |
| 33. | ஸரமை ஆறுதல் கூறுதல் | 265 |
| 34. | இராவணனின் உள்நோக்கம் | 267 |
| 35. | மால்யவான் உபதேசம் | 269 |
| 36. | இலங்கை பாதுகாப்பு | 271 |
| 37. | இராமன் வியூகம் அமைத்தல் | 273 |
| 38. | சுவேல மலையில் ஏறுதல் | 275 |
| 39. | இலங்கைக் காட்சிகள் | 276 |
| 40. | இராவணன்–சுக்ரீவன் தனிப்போர் | 278 |
| 41. | அங்கதன் தூது | 281 |
| 42. | போர் துவங்குதல் | 286 |
| 43. | ஒருவரோடொருவர் போர் | 289 |
| 44. | இரவுப் போர் | 292 |
| 45. | நாகபாசத்தால் கட்டப்படுதல் | 294 |
| 46. | சுக்ரீவன் முதலியோர் துயரம் | 296 |
| 47. | நாகபாசத்தில் கட்டுண்டு கிடக்கும் இராம–இலட்சுமணர்களை, சீதைக்குக் காட்டுதல் | 299 |
| 48. | திரிஜடை ஆறுதல் கூறுதல் | 301 |
| 49. | இராமன் உணர்வு பெற்று நெஞ்சம் தளர்தல் | 303 |
| 50. | நாகபாசத்திலிருந்து விடுதலை | 306 |
| 51. | தூம்ராட்சன் போர் செய்ய வருதல் | 309 |
| 52. | தூம்ராட்சன் மாண்டான்! | 312 |
| 53. | வஜ்ரதம்ஷ்ட்ரன் போரிடுதல் | 314 |
| 54. | வஜ்ரதம்ஷ்ட்ரன் வதம் | 316 |

Koviloor Digital Library




| ஸர்க்கம் எண் | பொருள் | பக்கம் எண் |
|---|---|---|
| 55. | அகம்பனன் போர் புரிதல் | 318 |
| 56. | அகம்பனன் மாண்டான்! | 320 |
| 57. | பிரஹஸ்தன் போரிடுதல் | 322 |
| 58. | பிரஹஸ்தன் மாண்டான்! | 325 |
| 59. | இராவணன் வருகை | 329 |
| 60. | கும்பகர்ணனை எழுப்புதல் | 339 |
| 61. | வீடணன், கும்பகர்ணனைப் பற்றி இராமனிடம் விளக்குதல் | 346 |
| 62. | கும்பகர்ணனைச் சமாதானம் செய்தல் | 348 |
| 63. | கும்பகர்ணன் வருந்துதல் | 350 |
| 64. | சீதையை வசப்படுத்துவதற்கான உபாயம் | 354 |
| 65. | கும்பகர்ணன் புறப்பாடு | 357 |
| 66. | வானரப்படையை நிலைகொள்ளச் செய்தல் | 360 |
| 67. | கும்பகர்ணன் வதம் | 362 |
| 68. | இராவணன் புலம்புதல் | 374 |
| 69. | நராந்தகன் மாண்டான்! | 376 |
| 70. | தேவாந்தகன் முதலியோர் வதம் | 382 |
| 71. | அதிகாயன் மாண்டான்! | 386 |
| 72. | சினந்து எழுந்தான், இராவணன்! | 393 |
| 73. | இந்திரஜித்தின் மாயப்போர் | 394 |
| 74. | மூலிகை மலையைக் கொண்டு வருதல் | 399 |
| 75. | இலங்கையைக் கொளுத்துதல் | 404 |
| 76. | கம்பனன் முதலியோர் வதம் | 408 |
| 77. | நிகும்பன் மாண்டான்! | 413 |
| 78. | மகராக்ஷன் போர்க்களம் வருதல் | 415 |
| 79. | மாண்டான், மகராக்ஷன்! | 416 |
| 80. | இந்திரஜித் மறைந்திருந்து போர் புரிதல் | 419 |
| 81. | மாயா சீதையைக் கொன்றது | 422 |
| 82. | நிகும்பிலையில் வேள்வி | 425 |
| 83. | இராமனைத் தேற்றுதல் | 426 |
| 84. | இந்திரஜித்தின் மாயையை விளக்குதல் | 430 |
| 85. | நிகும்பிலையை நோக்கிச் செல்லுதல் | 432 |
| 86. | இந்திரஜித்துடன் போர் துவக்கம் | 434 |
| 87. | விபீஷணன்–இந்திரஜித் இகழ் உரை | 436 |
| 88. | இந்திரஜித்தும் லட்சுமணனும் போரிடுதல் | 438 |

Koviloor Digital Library




| ஸர்க்கம் எண் | பொருள் | பக்கம் எண் |
|---|---|---|
| 89. | இந்திரஜித்–இலக்குவன் போர் தொடருதல் | 441 |
| 90. | இந்திரஜித்–இலக்குவன் போர் (தொடர்ச்சி) | 443 |
| 91. | இந்திரஜித் மாண்டான்! | 447 |
| 92. | இலக்குவனுக்கு மருத்துவம் | 452 |
| 93. | இராவணனின் புலம்பல் | 454 |
| 94. | காந்தர்வாஸ்திரத்தால் மயக்குதல் | 459 |
| 95. | அரக்கிகளின் புலம்பல் | 461 |
| 96. | இராவணன் போர்க்களத்திற்குப் புறப்படுதல் | 464 |
| 97. | மாண்டான், விரூபாட்சன்! | 467 |
| 98. | மகோதரன் வீழ்ச்சி! | 469 |
| 99. | மகாபார்சுவன் மாண்டான்! | 472 |
| 100. | இராம–இராவணப் போர் | 473 |
| 101. | சக்தி ஆயுதத்தால் லட்சுமணன் அடிபடுதல் | 476 |
| 102. | லட்சுமணனை உயிர்ப்பித்தல் | 480 |
| 103. | இந்திரனுடைய தேர் வருதல் | 483 |
| 104. | இராவணனின் சூலத்தை அழித்தல் | 486 |
| 105. | தேரை அப்புறப்படுத்தினான், இராவண சாரதி | 488 |
| 106. | இராவணன் போர்க்களத்திற்குத் திரும்பி வருதல் | 490 |
| 107. | ஆதித்யஹ்ருதயம் | 492 |
| 108. | நல்ல–தீய நிமித்தங்கள்! | 495 |
| 109. | இராம–இராவணப் போர் | 497 |
| 110. | இராவணனுடைய தலைகளைத் துண்டித்தல் | 499 |
| 111. | வீழ்ந்தான், இராவணன்! | 501 |
| 112. | விபீஷணனின் கதறல் | 503 |
| 113. | அந்தப்புரப் பெண்மணிகளின் கதறல் | 505 |
| 114. | மண்டோதரி புலம்புதல் | 507 |
| 115. | வீடணனுக்கு முடிசூட்டுதல் | 514 |
| 116. | அனுமான்–சீதை சந்திப்பு | 516 |
| 117. | சீதை, இராமனைப் பார்த்தல் | 520 |
| 118. | சீதையைக் கடிந்து பேசுதல் | 522 |
| 119. | சீதையின் அக்னிப் பிரவேசம் | 524 |
| 120. | பிரும்மா, இராமனைத் துதித்தல் | 526 |
| 121. | சீதையை ஏற்றுக்கொள்ளுதல் | 528 |
| 122. | தசரதன் வந்தார்! | 530 |

Koviloor Digital Library




| ஸர்க்கம் எண் | பொருள் | பக்கம் எண் |
|---|---|---|
| 123. | இந்திரன் வரம் கொடுத்தல் | 533 |
| 124. | புஷ்பகம் வருதல் | 534 |
| 125. | புஷ்பகம் புறப்படுதல் | 536 |
| 126. | வழியில் தென்பட்ட முக்கிய இடங்களைக் காட்டுதல் | 538 |
| 127. | பரத்வாஜரின் ஆசிரமத்தில் தங்குதல் | 541 |
| 128. | பரதன்–அனுமான் சந்திப்பு | 542 |
| 129. | அனுமான் கூறிய இராமகதை | 545 |
| 130. | இராம–லட்சுமண–பரத–சத்ருக்னர்கள் சந்திப்பு | 548 |
| 131. | இராமனுக்குத் திருமுடி சூட்டுதல்! | 551 |


## உத்தர காண்டம்


| | | |
|---|---|---|
| 1. | இராமனின் கேள்விகள் | 559 |
| 2. | புலஸ்தியர் உற்பத்தி | 561 |
| 3. | குபேரன் வரலாறு | 563 |
| 4. | அரக்கர் குலத்தின் வரலாறு | 566 |
| 5. | சுகேசனின் பரம்பரை | 568 |
| 6. | மகாவிஷ்ணு–மால்யவான் போர் | 571 |
| 7. | மாலி மாய்ந்தான்! | 575 |
| 8. | சுமாலி முதலியோர் தோல்வி அடைதல் | 578 |
| 9. | இராவணன் முதலியோர் பிறப்பு | 580 |
| 10. | இராவணன் முதலியோர் வரம் பெறுதல் | 583 |
| 11. | இராவணன் இலங்கையை அடைதல் | 586 |
| 12. | இராவணன் முதலியோருக்குத் திருமணம் | 589 |
| 13. | குபேரனுடைய தூதன் கொல்லப்பட்டான்! | 591 |
| 14. | யட்சர்–அரக்கர் போர் | 593 |
| 15. | இராவணன், புஷ்பக விமானத்தைக் கவர்ந்து செல்லுதல் | 595 |
| 16. | இராவணன் என்ற பெயர் பெறுதல் | 598 |
| 17. | வேதவதி கொடுத்த சாபம் | 601 |
| 18. | மருத்தனை வென்றான், இராவணன்! | 603 |
| 19. | அனரண்யன் கொடுத்த சாபம் | 605 |
| 20. | இராவணனைத் தூண்டிவிடுதல் | 607 |
| 21. | யமன்–இராவணன் பெரும் போர் | 610 |

Koviloor Digital Library




| ஸர்க்கம் எண் | பொருள் | பக்கம் எண் |
|---|---|---|
| 22. | யமனை வெற்றி கொள்ளுதல் | 613 |
| 23. | வருணனை வெற்றி கொள்ளுதல் | 616 |
| 24. | சூர்ப்பணகை, கரன் ஆகியோரை தண்டகாரண்யம் செல்ல ஆணையிடுதல் | 619 |
| 25. | தேவலோகத்தின் மீது படையெடுத்தல் | 622 |
| 26. | நளகூபரன் சாபம் கொடுத்தல் | 625 |
| 27. | சுமாலி மாய்ந்தான்! | 628 |
| 28. | ஜயந்தனை மறைத்து வைத்தல் | 631 |
| 29. | இந்திரன் பிடிபட்டான்! | 634 |
| 30. | இந்திரன் தோற்றதற்கான காரணம் | 636 |
| 31. | இராவணன், சிவனை ஆராதித்தல் | 640 |
| 32. | இராவணன் பிடிபட்டான்! | 642 |
| 33. | இராவணன் விடுதலை | 647 |
| 34. | வாலி–இராவணன் நட்பு | 648 |
| 35. | அனுமான் பிறப்பு | 651 |
| 36. | அனுமானுக்கு வரம் கொடுத்தல் | 655 |
| 37. | அரசவையில் இராமன்! | 659 |
| 38. | ஜனகன் முதலியோர் விடைபெற்றுச் செல்லுதல் | 660 |
| 39. | வானரர் மகிழ்ச்சி | 662 |
| 40. | அனுமானின் வேண்டுகோள் | 664 |
| 41. | புஷ்பகத்தைத் திருப்பி அனுப்புதல் | 666 |
| 42. | பூங்காவில் சீதா–ராமர்கள் | 667 |
| 43. | பத்ரன் கூறுவது | 669 |
| 44. | இலக்குவன் முதலியோரை அழைப்பித்தல் | 670 |
| 45. | 'சீதையை வனத்தில் விட்டுவிட்டு வா!' | 671 |
| 46. | கங்கைக் கரைக்கு சீதையை அழைத்துச் செல்லுதல் | 673 |
| 47. | சீதையிடம் இராமனின் ஆணையைக் கூறுதல் | 675 |
| 48. | சீதையைத் துறத்தல் | 676 |
| 49. | வால்மீகியின் ஆசிரமத்திற்குச் செல்லுதல் | 677 |
| 50. | சுமந்திரர் ரகசியத்தை வெளிப்படுத்துதல் | 679 |
| 51. | சுமந்திரர், துர்வாசர் கூறியதைக் கூறுதல் | 680 |
| 52. | லட்சுமணன், இராமனுக்கு ஆறுதல் கூறுதல் | 682 |
| 53. | நிருகன் பெற்ற சாபம் | 683 |
| 54. | பொந்துக்குள் நிருகன்! | 685 |

Koviloor Digital Library




| ஸர்க்கம் எண் | பொருள் | பக்கம் எண் |
|---|---|---|
| 55. | நிமியும் வசிஷ்டரும் சாபம் கொடுத்தல் | 686 |
| 56. | மைத்ராவருணி ஆதல் | 687 |
| 57. | நிமி, பிராணிகளின் கண்ணிமைப்பில் இடம் பெறுதல் | 689 |
| 58. | யயாதிக்குக் கிடைத்த சாபம் | 690 |
| 59. | புருவுக்கு முடிசூட்டுதல் | 692 |
| இடைச்செருகல் | 1. இராமனிடம் முறையீடு செய்ய, ஒரு நாயின் வருகை | 694 |
| ,, | 2. இராமன் அளித்த தீர்ப்பு | 695 |
| 60. | சியவனர் முதலான முனிவர் வருகை | 699 |
| 61. | 'லவணனிடமிருந்து காப்பாற்றுங்கள்!' | 700 |
| 62. | சத்ருக்னனுக்கு ஆணையிடுதல் | 701 |
| 63. | லவணனை வெல்லும் உபாயம் | 703 |
| 64. | சத்ருக்னன் புறப்படுதல் | 705 |
| 65. | கல்மாஷபாதன் வரலாறு | 706 |
| 66. | குச–லவர்கள் பிறப்பு | 708 |
| 67. | மன்னன் மாந்தாதா வதம் | 709 |
| 68. | லவண–சத்ருக்னரிடையே வாக்குவாதம் | 711 |
| 69. | லவணன் மாய்ந்தான்! | 712 |
| 70. | மதுராபுரியில் பிரவேசித்தல் | 714 |
| 71. | சத்ருக்னன் அயோத்திக்குப் புறப்படுதல் | 716 |
| 72. | சத்ருக்னன், இராமனைச் சந்தித்தல் | 717 |
| 73. | அந்தணர் அரற்றுதல் | 719 |
| 74. | நாரதர் வந்தார்! | 720 |
| 75. | உரிமையில்லாதவன் செய்த தவம் | 722 |
| 76. | சம்பூக வதம் | 723 |
| 77. | அகஸ்தியர் கூறிய ஸ்வர்கி வரலாறு | 726 |
| 78. | ஆபரணம் எவ்வாறு கிடைத்தது? | 728 |
| 79. | மன்னன் தண்டனின் ஆட்சி | 730 |
| 80. | பிருகுவின் புதல்வியைக் கைப்பற்றுதல் | 731 |
| 81. | சுக்ராசார்யார் கொடுத்த சாபம் | 732 |
| 82. | இராமன், அயோத்திக்குத் திரும்புதல் | 733 |
| 83. | ராஜசூயம் செய்யலாமே! | 734 |
| 84. | விருத்திரனின் தவத்தை வர்ணித்தல் | 736 |
| 85. | விருத்திரன் வதம் | 737 |
| 86. | இந்திரன் புனிதமடைந்தான்! | 739 |

Koviloor Digital Library




| ஸர்க்கம் எண் | பொருள் | பக்கம் எண் |
|---|---|---|
| 87. | மன்னன் இளன் வரலாறு | 740 |
| 88. | இளா–புதன் சந்திப்பு | 742 |
| 89. | புரூரவன் பிறப்பு | 743 |
| 90. | இளா, ஆணாகவே மாறினாள்! | 744 |
| 91. | அசுவமேதம் செய்ய இராமன் ஆணையிடுதல் | 746 |
| 92. | அசுவமேத யாகம் | 748 |
| 93. | வால்மீகி ஆணை | 749 |
| 94. | இராமாயண அரங்கேற்றம் | 750 |
| 95. | வால்மீகியிடம் தூதர் வருகை | 752 |
| 96. | வால்மீகியின் சாட்சியம் | 753 |
| 97. | சீதை ரஸாதலம் புகுதல் | 754 |
| 98. | இராமன் சாந்தம் அடைந்தார்! | 756 |
| 99. | கௌசல்யை முதலியோரின் இறுதிக்காலம் | 758 |
| 100. | பரதன், கந்தர்வ நாட்டின் மீது படையெடுத்தல் | 759 |
| 101. | கந்தர்வர் வீழ்ச்சியும், தட்ச–புஷ்கலன் ஆட்சியும் | 760 |
| 102. | அங்கதனுக்கும் சந்திரகேதுவுக்கும் அரசு அளித்தல் | 762 |
| 103. | இராமனைச் சந்திக்க, காலன் வந்தான்! | 763 |
| 104. | இராமனுக்குப் பிரும்மாவின் செய்தியைக் கூறுதல் | 764 |
| 105. | துர்வாசர் வருகை | 765 |
| 106. | இராமன், இலக்குவனைத் துறந்தார்! | 767 |
| 107. | குச–லவர்களுக்குப் பட்டம் சூட்டுதல் | 768 |
| 108. | விபீஷணன் முதலியோருக்கு இட்ட கட்டளை | 769 |
| 109. | இராமன் திருநாட்டுக்குப் புறப்படுதல் | 771 |
| 110. | இராமன் பரமபதம் எழுந்தருளல் | 773 |
| 111. | இராமாயண மகிமை | 775 |

*ஸ்ரீமந் நாராயணீயம் – நூறாவது தசகம் –*
*பகவானைத் திருமுடி முதல் திருவடி வரை வர்ணித்தல்* 777

Koviloor Digital Library

॥ ஸ்ரீஹரி: ॥

ஓம் நமோ பகவதே வாஸுதேவாய

# ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம்

## சுந்தர காண்டம்

### ஸர்க்கம் : ஒன்று

### அனுமான் சமுத்திரத்தைத் தாண்டுதல்

பின்னர், (ஜாம்பவானால் தூண்டப்பட்டு) எதிரிகளைக் கசக்கி எடுப்பவரான அவர் (அனுமான்), இராவணனால் கவர்ந்து செல்லப்பட்ட சீதை இருக்குமிடத்தைத் தேடிக் கண்டுபிடிக்க, சாரணர்கள் செல்லும் வானவீதியில் செல்ல விரும்பினார். செயற்கரியதும் பிறரால் செய்ய முடியாததுமான காரியத்தைச் செய்ய விரும்பிய ஆஞ்சநேயர் கழுத்து–தலையை நிமிர்த்தி நின்று, பசுக்கூட்டத்தில் விளங்கும் காளை போல் திகழ்ந்தார். வைடூர்ய வர்ணமுடைய தூய தண்ணீரின் அலைவரிசை போல் அழகாக விளங்கும் இளம்புற்கள் நிறைந்த (மகேந்திர மலையின்) மேற்புறங்களில் சுகமாக உலாவினார். (1–3)

புத்திமானான அவர் (தன்னுடைய பேருருவத்தால்) பறவைகளைப் பயமுறச் செய்து, மார்பால் மரங்களை முறித்துத் தள்ளி, ஏராளமான விலங்குகளை மாய்த்து முழுபலத்தைப் பிரயோகிக்கும் சிங்கம் போல விளங்கினார். நீலம், சிவப்பு, மஞ்சள், தாமரை, வெளுப்பு, கறுப்பு முதலிய வர்ணங்கள் இயற்கையாகவே அமையப் பெற்ற விசித்திரமான தாதுக்களால் செம்மையாக அலங்கரிக்கப்பட்டதும், இஷ்டமான உருவம் எடுக்கக் கூடிய யட்ச–கின்னர–கந்தர்வர்களும், தேவர்கள் போன்ற பரிவாரங்களை உடைய பன்னகர்களும், கணக்கில்லாத உயர்ந்த யானைகள் உள்ளதுமான அந்த மலையின் தாழ்வரையில், ஆஞ்சநேயர் விஸ்தாரமான மடுவில் விளையாடும் யானை போல் காணப்பட்டார். (4–7)

அவர், சூரியன்–மகேந்திரன்–வாயு–பிரும்மாவுக்கும் மற்றுமுள்ள பூதகணங்களுக்கும் கைகூப்பி அஞ்சலி செய்துவிட்டு, புறப்படுவதில் மனத்தைச் செலுத்தினார். கிழக்கு நோக்கி நின்று, தன் தந்தையான வாயு பகவானுக்கு அஞ்சலி செலுத்திவிட்டு, சாமர்த்தியமுள்ள அவர் தென்திசை நோக்கிப் புறப்படுவதற்காகத் தன்னை வளர்த்துக் கொண்டார். வானரர்கள் பார்த்துக் கொண்டிருக்க, இராமனுக்கு க்ஷேமம் வளரவேண்டும் என்பதற்காகப் பெருங்கடலைத் தாண்ட நிச்சயித்து, பருவ காலங்களில் பொங்கும் சமுத்திரம் போல் வளர்ந்தார். (8–10)

அளவிட முடியாதபடி சரீரத்தை எடுத்துக் கொண்ட அவர், சமுத்திரத்தைத் தாண்ட விரும்பி, (அதற்குத் தன்னை ஆயத்தப்படுத்திக் கொள்ளும்விதமாக) கைகளாலும் கால்களாலும் அந்த மலையை அழுத்தினார். வானரரால் அழுத்தப்பட்ட அந்த மலையும் சிறிது நேரம் நடுங்கிற்று. (அந்த அசைவினால்) மரங்களில் பூத்திருந்த மலர்கள் எல்லாம் உதிர்ந்தன. அப்படி மரங்களிலிருந்து எல்லாப் பக்கங்களிலும் உதிர்ந்த நறுமணமுள்ள மலர்களால் மூடப்பட்ட அந்தப் பர்வதம், மலர்க்குவியல் போலாயிற்று. தலைசிறந்த வீரரான அவரால் அழுத்தப்பட்ட அந்த பர்வதம், மதநீரைப் பெருகவிடும் யானையைப் போல நீர்த்தாரைகளைப் பெருக்கிற்று. (11–14)

பலம் பொருந்திய அவரால் பீடிக்கப்பட்ட அந்த மலை, பொன்னிறம், கருமை, மை போன்ற வெள்ளி ரேகைகளை வெளிப்படுத்தியது. அக்னியின் ஏழு நாக்குகளில் நடுவிலுள்ள சுலோஹிதா என்னும் நாக்கு, கொழுந்துவிட்டு எரியும் போது, வரிசையாகப் புகை வெளிப்படுவதைப் போல,

Koviloor Digital Library



அம்மலையிலிருந்து 'மனோசிலை' (ஒருவகை பாஷாணம்) என்னும் தாதுக்களோடு கூடிய பாறைகள் சரிந்து விழுந்தன. (அனுமானால்) பீடிக்கப்பட்ட மலையினால், எல்லாப் பக்கங்களிலும் இருந்த குகைகளில் வசித்த அனைத்துப் பிராணிகளும் பீடிக்கப்பட்டு, அவலமான குரலில் ஓலமிட்டன. மலை பீடிக்கப்பட்டதால் உண்டான அந்தப் பேரொலி, மண்ணிலும் திசைகளிலும் தோட்டங்களிலும் நிரம்பியது. (15–18)

அங்கிருந்த பெரிய சர்ப்பங்கள், விஷ்ணுபாதம் போன்ற ஸ்வஸ்திக ரேகைகள் விளங்கிய பெரிய படங்களை எடுத்து, கடுமையான விஷத்தைக் கக்கிக் கொண்டு, பற்களால் பாறைகளைக் கடித்தன. அப்போது, கோபம் கொண்ட சர்ப்பங்களால் விஷத்தோடு கடிக்கப்பட்ட பெரும் பாறைகள், ஆயிரக்கணக்கான துண்டுகளாகச் சடசட என்று பயங்கரமாக ஒலி எழுப்பிக் கொண்டு சிதறிப் போயின. மேலும், விஷாக்னியில் எரிக்கப் பெற்றுப் பிரகாசித்தன. அந்தப் பர்வதத்தில் முளைத்திருந்த பச்சிலைகள் பாம்புகளின் விஷத்தை முறிக்கக் கூடியவையாயினும், அப்போது விஷத்தை அடக்கச் சக்தியற்றவையாயிருந்தன. (கக்கப்பட்ட விஷம், அவ்வளவு அதிகமான அளவிலும் கொடுமையாகவும் இருந்தது.) (19–21)

மலையிலிருந்த தவசிகள் 'இந்த மலை பூதங்களால் பிளக்கப்படுகிறது' என்று நினைத்துப் பயம் அடைந்தார்கள். வித்யாதரர்கள், பானசாலையிலிருந்த தங்கமயமான பான பாத்திரங்களையும், விலைமதிக்க முடியாத பாத்திரங்களையும், தங்கக்குடங்களையும், நாக்கால் நக்கிச் சாப்பிடக் கூடியவைகளையும், உயர்வகை உண்டிகளையும், பல்வகையான பிற உணவுகளையும், காளைத் தோல் கேடயங்களையும், தங்கப்பிடியுள்ள கத்திகளையும் விட்டுவிட்டு, மதுபானம் அருந்தியதால் வெண்தாமரை போன்ற கண்கள் செந்தாமரையைப் போல் சிவந்தும், சிவந்த மலர்களாலும் சிறந்த சந்தனங்களாலும் அலங்கரிக்கப்பட்டு மயங்கியும் மனைவிகளோடு ஆகாயம் நோக்கிக் கிளம்பிப் போனார்கள். (22–25)

ஆகாயத்தில் பெண்மணிகள், மாலைகள், சிலம்புகள், தோள்வளைகள், கைவளையல்கள் ஆகிவற்றைத் தரித்துக் கொண்டு, ஆச்சரியத்தால் புன்னகை செய்து கொண்டு, தத்தம் கணவர்களுடன் அந்த மலையைப் பார்த்துக் கொண்டிருந்தார்கள். வித்யாதரர்களும் மாமுனிவர்களும் மாயாஜால வித்தைகளைக் காண்பித்துக் கொண்டு, ஆகாயத்திலிருந்தவாறே மலையின் மீது குதூகலத்துடன் பார்வையைச் செலுத்தினார்கள். அப்போது, ஆத்மானுபவம் பெற்ற ரிஷிகளும் சாரணர்களும் சித்தர்களும் நிர்மலமான ஆகாயத்தில் இருந்து கொண்டு, பின்வருமாறு பேசியதைக் கேட்டார்கள் (வித்யாதரர்கள்). (26–28)

'மலையைப் போன்றவரும், வேகம் உடையவரும், வாயுகுமாரருமான இந்த அனுமான், பெரிய மீன்களுக்கு இருப்பிடமான கடலைக் கடக்க விரும்புகிறார். இராமனுக்காகவும் வானரர்களுக்காகவும் செயற்கரிய செயலைச் செய்ய விரும்பி, அடைய முடியாத கடலின் அக்கரையை அடைய விரும்புகிறார்.' இவ்வாறு, அந்த மகாத்மாக்கள் பேசியதைக் கேட்ட வித்யாதரர்கள், நிகரற்றவரும் வானரர்களுள் காளை போன்றவருமான அவர், பர்வதத்தில் நிற்பதைப் பார்த்தார்கள். (29–31)

மலை போன்ற அவர் (அனுமான்), ரோமங்களைச் சிலிர்த்துக் கொண்டார்; சிறிது அசைந்து கொடுத்தார்; மிகப்பெரிய மேகத்தின் சப்தம் போல், மிகப்பெரியதாக நாதம் செய்தார். மேலே கிளம்பிச் செல்ல விரும்பியவராய், உரோமங்கள் அடர்ந்ததும் வட்டச் சுருளாகச் சுருண்டதுமான வாலை, கருடன் மலைப்பாம்பைப் பற்றி அடிப்பதுபோல் சுழற்றி அடித்தார். மிக்க வேகத்தை அடைந்த அவருடைய பின்புறம் நீண்டிருந்த வால், கருடனால் கவர்ந்து செல்லப்படும் பாம்பு போல் காணப்பட்டது. பெரிய (கோட்டை வாசல்) தாழ்ப்பாள் போன்ற தன் இரு கைகளையும் மலையில் ஊன்றிக் கொண்டு, (மூச்சைப் பிடித்து நிறுத்தி) இடுப்பைச் சுருக்கி, கால்களையும் மடக்கிக் கொண்டார். (32–35)

Koviloor Digital Library



வீர்யம் உடையவரும் ஸ்ரீமானுமாகிய அவர், கைகளையும் கழுத்தையும் சுருக்கிக் கொண்டு, தேஜஸ், ஆற்றல், வீர்யம் ஆகியவற்றை வளர்த்துக் கொண்டார். மேல் நோக்கி ஆகாயத்தில் பார்வையைச் செலுத்தி, செல்லவேண்டிய பாதையைக் கண்ணுக்கெட்டிய தூரம் வரை பார்த்து, இருதயத்தில் பிராணனை நிலைப்படுத்திக் கொண்டார். வானரர்களில் யானை போன்ற அவர், உயரே கிளம்ப விரும்பியவராய், கால்களைக் கீழே நன்றாகப் பதித்து, காதுகளைச் சுருக்கிக் கொண்டார். (36–38)

அனுமான், வானரர்களைப் பார்த்துப் பின்வருமாறு கூறினார்— 'இராகவனால் விடப்பட்ட, வாயுவின் வேகமும் ஆற்றலும் உடைய பாணம் போல், இராவணனால் பரிபாலிக்கப்படும் இலங்கைக்குச் செல்லப் போகிறேன். இலங்கையில் ஜனககுமாரியைப் பார்க்காவிட்டால், இதே வேகத்துடன் தேவலோகம் செல்வேன். தேவலோகத்தில் சீதையைக் காணாவிட்டால், கொஞ்சம்கூட சிரமப்படாமல், ராட்சஸ மன்னனான இராவணனைக் கட்டி இழுத்துக் கொண்டு வருவேன். எப்படியும் காரியத்தை முடித்துக் கொண்டு சீதையுடன் வந்து சேருவேன். தேவைப்பட்டால், இராவணன் முதலானோரோடு இலங்கையைப் பெயர்த்து எடுத்துக் கொண்டும் வருவேன்' என்று, வானரோத்தமரான அவர், வானரர்களிடம் கூறிவிட்டு, கவலையில்லாமல் வேகமாக மேலே எம்பினார். அப்போது அவர், தன்னைக் கருடனாகவே நினைத்துக் கொண்டார். (39–44)

அவர் வேகமாகப் புறப்பட்டபோது, மலைமேல் இருந்த மரங்கள் கிளைகளோடுகூட நாலாபுறத்திலிருந்தும் கூடவே கிளம்பின. மதங்கொண்ட நாரைகளுடனும், கொக்குகளுடனும், மலர்ந்த புஷ்பங்களுடனும் விளங்கிய அந்த மரங்களைத் தன் தொடையின் வேகத்தால் இழுத்துக் கொண்டு, நிர்மலமான ஆகாயத்தில் சென்றார், அனுமான். வெகுதூரம் செல்வதற்குப் புறப்பட்டவரை, அவருடைய உறவினர்கள் வழியனுப்பி வைப்பதைப் போல, அனுமானுடைய தொடைகளின் வேகத்தால் பெயர்க்கப்பட்ட மரங்கள், சிறிதுநேரம் அவரைப் பின்தொடர்ந்து சென்றன. (45–47)

படைவீரர்கள் அரசனைப் பின்தொடர்ந்து செல்வதைப் போல, அவரது தொடை வேகத்தால் முறிக்கப்பட்ட ஸால மரங்களும், மற்ற மரங்களும் அனுமானைப் பின்தொடர்ந்து சென்றன. நன்றாகப் புஷ்பித்த கிளைகளைக் கொண்ட மரங்களால் சூழப்பட்ட அனுமான், ஒரு பர்வதம் போல் வியக்கத்தக்க தோற்றமுடையவராக விளங்கினார். (முன்னர் ஒரு காலத்தில்) மகேந்திரனுக்குப் பயந்த மலைகள், கடலில் மூழ்கியது போல, செழுமையாக வளர்ந்திருந்த மரங்களனைத்தும் உப்புக்கடலில் விழுந்து மூழ்கின. (48–50)

மேகம் போல் விளங்கிய வானரர், பலவகையான தளிர்–மொட்டு–மலர்களால் சூழப்பட்டவராய், மின்மினிப் பூச்சிகளால் சூழப்பட்ட பர்வதம் போல் விளங்கினார். அவருடைய வேகத்தால் உண்டான சக்தி அடங்கி, மரங்கள் புஷ்பத்தை உதிர்த்துக் கொண்டு சமுத்திரத்தில் விழுவதைப் பார்க்கும் போது, (பிரயாணப்பட்டவரை அனுப்பிவிட்டுத்) திரும்பிச் செல்லும் நண்பர்கள் போல் இருந்தது. அனுமான் புறப்பட்ட வேகக் காற்றினால் உதிர்க்கப்பட்ட பல நிறங்கொண்டவையும், பல வகைப்பட்டவையுமான மலர்கள், கனம் இல்லாததால் கடலில் விழுந்தன. (51–53)

நானா வர்ணமுள்ள மலர்க் கூட்டங்களால் சூழப்பட்ட வானரர், மின்னற்கொடிகளால் அலங்கரிக்கப்பட்டு, மேலே புறப்பட்டுக் கொண்டிருக்கும் மேகம் போல் விளங்கினார். அவரது வேகத்தால் உதிர்ந்த மலர்களால், உதயமாகிக் கொண்டிருக்கும் அழகிய தாரகைகளோடு கூடிய ஆகாயம் போல் சமுத்திரம் காணப்பட்டது. ஆகாயத்தில் விரிக்கப்பட்ட அவருடைய இரு கைகளும், மலைமுகட்டிலிருந்து கிளம்பிய ஐந்து தலைகளைக் கொண்ட இரண்டு நாகங்கள் போல் தோன்றின. (54–56)

அந்தப் பெருவானரர், அலைகளைக் கொண்ட பெருங்கடலைக் குடிப்பவர் போலவும், ஆகாயத்தைப் பருக விரும்புபவர் போலவும் காணப்பட்டார். வாயு மார்க்கத்தில் செல்லும்

Koviloor Digital Library



அவருடைய மின்னல் போன்ற இருகண்களும், மலையிலுள்ள அக்னி போல் பிரகாசித்தன. அனுமானுடைய மஞ்சள் நிறமான, வட்டமான பெரிய இரு விழிகளும் உதயமாகும் சந்திரசூரியர்களைப் போல் ஒளிவீசின. அவருடைய சிவந்த மூக்கினால் சிவப்பான முகம், சந்த்யையோடு கூடிய சூரிய மண்டலம் போல் விளங்கிற்று. வாயுகுமாரர் தாண்டிக் கொண்டிருக்கும்போது உயரத் தூக்கப்பட்ட வால், ஆகாயத்தில் உயர்த்தப்பட்ட இந்திரனுடைய கொடி போல் விளங்கியது. (57–61)

மகாபுத்திசாலியும், மகானும், வெண்மையான கடைவாய்ப் பற்களை உடையவருமான வாயு மைந்தர், சுருண்ட வாலினால் ஒளி வட்டம் சூழ்ந்த சூரியன் போல் ஜொலித்தார். வாலின் அடிப்பகுதி செம்மையாக இருந்ததால், பெரிய மலை, மலைத் தாதுக்களால் பிளக்கப்பட்டது போலிருந்தது. அந்த வானரச் சிங்கம் தாண்டும்போது, அக்குளில் மோதிப் புறப்பட்ட காற்றின் சப்தம், மேக கர்ஜனை போலிருந்தது. ஆகாயத்தில், வடக்குத் திசையிலிருந்து தெற்கு நோக்கிச் செல்லும் உல்கா என்னும் எரிகொள்ளி போல், அந்த வானரர் காணப்பட்டார். ஆகாயத்தில் செல்லும் சூரியனைப் போன்றவரும், நெடிய உருவம் படைத்தவருமான வானரர், கடலைத் தாண்டுவதற்காகக் கட்டிக் கொண்ட கச்சத்தால், மதம் பிடித்த யானை போல் விளங்கினார். (62–66)

மேலே தனது உடலாலும், கீழே கடல்நீரில் காணப்பட்ட தனது நிழலாலும், அந்த வானரர் காற்றால் செலுத்தப்படும் ஓடம் போல் அப்போது தோன்றினார். அவர், கடலில் எங்கெங்கு சென்றாரோ, அந்தந்த இடங்களெல்லாம் அவருடைய தொடை வேகத்தால் (கடல்) கலக்கப்பட்டது போல் காணப்பட்டது. மலைகள் போன்ற சமுத்திர அலை வரிசைகளைத் தன் மார்பினால் இடித்துத் தள்ளிக் கொண்டு, அதிவேகம் படைத்த மாவானரர் தாவிக் கொண்டிருந்தார். பலமான மேகக் காற்றும், வானரரின் வேகத்தால் உண்டான காற்றும் பயங்கரமாக ஓசை எழுப்பும் பெருங்கடலை மிகவும் நடுங்கச் செய்தன. (67–70)

உப்புக் கடலிலிருந்து பெரிய பெரிய அலைக் கூட்டங்களை இழுத்துக் கொண்டு சென்ற வானரச் சிங்கம், அவைகளை ஆகாயத்திலும் பூமியிலும் வாரி இறைப்பதைப் போலப் பாய்ந்தார். மிகுந்த வேகத்துடன் சென்ற அவர், பெருங்கடலில் மேரு–மந்த்ர மலைகளுக்கு ஒப்பான அலைகளைக் கணக்கிடுபவர் போல் வரிசையாகக் கடந்து சென்றார். அவருடைய வேகத்தினால் இழுக்கப்பட்ட கடல்நீர் மேகத்தோடு சேர்ந்து, ஆகாயத்தில் பரவிநின்ற சரத்கால மேகம் போல் தோன்றியது. (71–73)

அப்போது, மனிதர்களின் உடம்பிலிருந்து ஆடைகள் களையப்பட்டபின் அங்கங்கள் தெரிவதைப் போல, கடலில் வாழும் திமிங்கலம், முதலை, மீன், ஆமை முதலிய நீர்வாழ் பிராணிகள் (தங்களை மூடியிருந்த தண்ணீர் மேலே போய்விட்டதால்) வெளியே காணப்பட்டன. ஆகாயத்தில் நீந்திக் கொண்டிருக்கும் அனுமானைப் பார்த்து கடல்வாழ் பாம்புகள், கருடன் என்று எண்ணின. பத்து யோஜனை அகலமும், முப்பது யோஜனை நீளமும் படைத்த வானர சிம்மத்தின் நிழல், தண்ணீரில் மிக அழகாகத் தென்பட்டது. (74–76)

உப்புக் கடலில் பரவியதான, வாயுகுமாரனைத் தொடர்ந்து செல்லும் அவருடைய நிழல், வெண்மையான மேகக் கூட்டம் போல் பிரகாசித்தது. பேரொளியும் பேருடலும் கொண்ட அனுமான், பிடிப்பு ஏதும் இல்லாத ஆகாய வழியில், இறக்கை படைத்த பர்வதம் போல் விளங்கினார். பலம் பொருந்திய இந்த வானர வீரர், வேகமாக எந்த வழியில் சென்றாரோ, அந்த வழியில் சமுத்திரப் பகுதி, இரண்டு ஓரங்களிலும் உயர்ந்து நடுவில் தாழ்ந்திருக்கும் மிகப்பெரிய கொப்பரை போல் காணப்பட்டது. (77–79)

பறவைக் கூட்டங்கள் சஞ்சரிக்கும் ஆகாய வீதியில் கருடனைப் போல் சென்ற அனுமான், வாயுவைப் போல் மேகக் கூட்டங்களையும் இழுத்துச் சென்றார். அவர், மேகக் கூட்டங்களுள்

Koviloor Digital Library



திரும்பத் திரும்பப் புகுந்து வெளிப்பட்டது, மேகங்களால் சந்திரன் மறைக்கப்படுவதும் வெளிப்படுத்தப்படுவதும் போல இருந்தது. வானரரால் இழுக்கப்பட்ட மேகங்கள் வெண்மை, சிவப்பு, மஞ்சள், நீலம் முதலிய நிறங்களுடையவையாகப் பிரகாசித்தன. தேவ–கந்தர்வ–தானவர்கள், வேகமாக சமுத்திரத்தைத் தாண்டிச் செல்லும் வானரரைப் பார்த்து, அவர்மேல் மலர்மாரியைப் பொழிந்தார்கள். (80–83)

இராமனுடைய காரியம் வெற்றி பெற வேண்டும் என்பதற்காக, தாண்டிக் கொண்டிருக்கும் உத்தம வானரரை சூரியன் சுடவில்லை; வாயு பகவான் அப்போது (குளிர்ச்சியாகத்) தழுவிக் கொடுத்தார். வானவீதியாகத் தாண்டிச் செல்லும் அவரை, முனிவர்கள் வாழ்த்தினார்கள்; தேவகந்தர்வர்கள், மகாபலசாலியான அவரைப் புகழ்ந்திசைத்தார்கள். களைப்பில்லாமல் செல்லும் சிறந்த வானரரைப் பார்த்து, வானத்தில் சஞ்சரிக்கும் நாக–யட்ச–ராட்சஸ–தேவர்கள் தோத்தரித்து மகிழ்வித்தார்கள். வானரச் சிங்கமான அந்த அனுமான் தாண்டிக் கொண்டிருந்தபோது, இக்ஷ்வாகு குலத்தைக் கௌரவிக்க விருப்பங்கொண்ட சமுத்திரராஜன், அது பற்றிச் சிந்திக்கலானான். (84–87)

'வானரேந்திரரான அனுமானுக்கு நான் உதவி செய்யாவிட்டால், பேசும் சக்தி படைத்தவர்கள் எல்லோரும் என்னைப் பழிப்பார்கள். நான், இக்ஷ்வாகு குலத் தலைவரான ஸகரன் என்பவரால் உண்டாக்கப்பட்டேன். இவரோ, இக்ஷ்வாகு குலத்தைச் சேர்ந்த இராமனுக்கு உதவியாளர். எனவே, இவரைக் கஷ்டப்பட விடக்கூடாது. அனுமான் இளைப்பாறுவதற்கு ஏற்றதான ஓர் ஏற்பாட்டைச் செய்யவேண்டும். என்னிடத்தில் களைப்பைப் போக்கிக் கொண்டு, மீதியுள்ள தூரத்தைச் சிரமமில்லாமல் தாண்டிவிடுவார்.' (88–90)

இவ்வாறு நல்ல முடிவுக்கு வந்த கடலரசன், தண்ணீருக்குள் மறைந்திருந்த, சிறந்ததும் பொற்சிகரங்களையுடையதுமான மைநாகம் என்ற மலையைப் பார்த்துக் கூறினான்— ''பர்வத சிரேஷ்டனான நீ, பாதாளத்தில் வசிக்கும் அசுரக் கூட்டங்கள் மேலே வராதபடி, கோட்டைத் தாழ்ப்பாள் போல, இந்திரனால் இங்கே வைக்கப்பட்டாய். நீ, பலம் மிகுந்தவர்களும் மறுபடியும் வெளியே வரக்கூடியவர்களுமான அசுரர்களின் நிகரில்லாத பாதாளத்தின் வாசலை மறைத்துக் கொண்டு நிற்கிறாய். (91–93)

மலைமுதல்வனே! எழுந்திராய்! உனக்கு மேலும் கீழும் குறுக்கிலும் வளர்வதற்குத் திறமை உண்டு. ஆகையால், உன்னைக் கிளப்புகிறேன் (தூண்டுகிறேன்). வீர்யம் படைத்தவரும், பயங்கரச் செயல்களைச் செய்பவரும், வானரச் சிங்கமுமான அனுமான், இராமகாரிய நிமித்தமாக ஆகாயத்தில் பறந்து கொண்டு வருகிறார். இக்ஷ்வாகு குலத்தினருக்குச் சேவை செய்ய விரும்பும் நான், இவருக்கு உதவி செய்யத்தான் வேண்டும். இக்ஷ்வாகு குல மன்னர்கள் என்னால் கௌரவிக்கத் தக்கவர்கள்; உன்னால் மிகவும் உயர்வாக மதிக்கத் தக்கவர்கள். நமது நன்மைக்காக உதவி செய்; நாம் செய்ய வேண்டிய காரியத்தைத் தவறவிடக் கூடாது; செய்ய வேண்டிய காரியம் செய்யப்படாமல் போனால், சான்றோர்களுக்குக் கோபம் உண்டாகும். (94–97)

தண்ணீரிலிருந்து மேலே எழுந்து வா! இந்த வானரர் உன்னிடம் தங்குவார். தாவிச் செல்லும் வானரர்களுள் முதன்மையானவரான இவர், நம்முடைய விருந்தினர்; உபசாரத்திற்குரியவர். பொற்சிகரத்தை உடையவனே! தேவ–கந்தர்வர்களால் வணங்கப்படுபவனே! அனுமான் உன்னிடம் இளைப்பாற்றிக் கொண்டு, பின்னர், மீதியிருக்கும் தூரத்தைக் கடந்து போவார். சீதையின்பால் காகுத்தனின் இரக்கத் தன்மையையும், (இராவணனால் கவர்ந்து செல்லப்பட்டதால்) மிதிலைச் செல்வி வேறோர் இடத்தில் இருப்பதையும், வானரத் தலைவனின் களைப்பையும் உணர்ந்து, நீ எழுந்திருக்கக் கடவாய்.'' (98–100)

கடலரசனுடைய சொற்களைக் கேட்டு, பெரிய மரம்–கொடிகளோடு கூடியதும், பொற்சிகரம் உடையதுமான மைநாகம் விரைவாகத் தண்ணீரிலிருந்து மேலே எழுந்தது. மேகத்தைப் பிளந்து

Koviloor Digital Library



கொண்டு கொழுந்துவிட்டெரியும் கதிர்களை உடைய சூரியன் வெளிப்படுவது போல், அப்போது கடல்நீரைப் பிளந்து கொண்டு, அது மேலே வந்தது. சிறிது நேரத்திற்குள் சமுத்திரராஜனால் உத்தரவிடப்பட்டவனும், மகாத்மாவும், நீரால் சூழப்பட்டிருப்பவனுமான மைநாக பர்வதம், மலைச்சிகரங்களை வெளிக்காட்டியது. (101–103)

கின்னரர்–மகாசர்ப்பங்களோடு கூடியதும், தங்கப் பிரகாசமுடையதும், உதயகால சூரியனைப் போல் ஜொலிக்கின்றதும், ஆகாயத்தைத் தொடுவது போன்ற சிகரங்களை உடையதுமான மேலே வெளிப்பட்ட தங்கமயமான பர்வதத்தின் முகடுகளால் நீலவண்ண ஆகாயம் தங்கத்தின் ஒளி கொண்டதாயிற்று. அந்த முதன்மையான மலை, இயற்கையான காந்தியினால் ஒளி வீசுபவைகளும் பொன்மயமானவைகளுமான சிகரங்களால் நூற்றுக்கணக்கான சூரியனின் ஒளிபோன்று பிரகாசமுடையதாக ஆயிற்று. (104–106)

கடல் நடுவிலிருந்து தடையேதுமில்லாமல் மேலே எழும்பி, தன் எதிரில் நின்ற அதைப் பார்த்து, 'இது ஓர் இடையூறு' என்று எண்ணினார், ஆஞ்சநேயர். மிகவும் வேகத்தோடு சென்று கொண்டிருந்த அனுமான், மிக நன்றாக மேலே எழும்பிய அதனைக் காற்று மேகத்தைத் தள்ளுவதைப்போல மார்பினால் மோதித் தள்ளினார். அந்த வானரரால் மோதப்பட்ட சிறந்த மலையானது, அனுமானின் வேகத்தை அனுபவபூர்வமாக உணர்ந்து, பெரிதும் ஆச்சரியமும் ஆனந்தமும் அடைந்தது. (107–109)

மறுபடியும் மேலே எழும்பிய மலை, ஆகாயத்தில் சென்று கொண்டிருந்த வீரரைப் பார்த்துத் திருப்தியடைந்து, மனித வடிவை ஏற்று, தன் சிகரத்தில் நின்றபடி, மகிழ்ச்சியோடு கூறிற்று— "வானரோத்தமரே! செயற்கரிய செயலைச் செய்திருக்கிறீர்கள். (ஆகவே,) என்னுடைய சிகரங்களில் இறங்கி, இஷ்டப்படி இளைப்பாறிக் கொள்ளுங்கள். இராகவனுடைய குலத்தில் முன்னர் தோன்றியவர்களால் சாகரம் (கடல்) தோண்டப்பட்டது. அதனால், இராம காரியத்தில் ஈடுபட்டுள்ள உங்களுக்குப் பதில் மரியாதை செய்கிறார், கடலரசன்.

ஒருவர் செய்த உபகாரத்திற்கு (நன்றி தெரிவிக்கும் முறையில்) அவருக்குப் பதில் உபகாரம் செய்வது என்பது மிகப்பழமையான தருமம். தனக்குச் செய்யப்பட்ட உபகாரத்திற்குப் பதில் செய்ய விரும்பும் அவர், உங்களால் கௌரவிக்கத்தக்கவர். உங்களிடம் உள்ள மரியாதை காரணமாக கடலரசனால் ஏவப்பட்டு வந்துள்ளேன். சற்று நில்லுங்கள்; என்னிடம் தங்கி களைப்பாறிய பின் செல்லுங்கள். 'நூறு யோஜனை தூரத்தையும் இந்த வானரர் தாண்டுவார். என்றாலும், உன் சிகரங்களில் இளைப்பாறிய பின், மீதி தூரத்தைக் கடந்து செல்வார்' என்று சொன்னார் (கடலரசன்). (110–115)

வானர சிரேஷ்டரே! நல்ல மணமும் ருசியும் உள்ள கிழங்கு–வேர்–பழங்களைச் சாப்பிட்டு ஓய்வெடுத்துக் கொண்டு, நாளைய தினம் செல்லுங்கள். வானரப் பெருந்தகையே! பெரியோர்களை உபசரிக்க வேண்டும் என்ற தருமம், மூன்று உலகங்களிலும் பிரசித்தமானது. எங்களுக்கும் உங்களுக்கும் இந்த உறவு இருக்கிறது. முதன்மை வானரரே! வேகமுள்ளவர்களும், வானில் பறப்பவர்களுமான பிராணிகளுள், நான் உங்களை மிகச்சிறந்தவராகக் கருதுகிறேன். அதிதியாக வந்திருப்பவர் பாமரனாக இருந்தபோதிலும், பண்புநெறி அறிந்தவர்களால் கௌரவிக்கத்தக்கவர் என்றிருக்கும் போது, உங்களைப் போன்ற மகான், நிச்சயம் நன்றாக உபசரிக்கப்பட வேண்டும் என்பதைச் சொல்லவும் வேண்டுமா?

வானரவேழமே! நீங்கள் தேவர்களில் சிறந்தவரும், மகாத்மாவுமான வாயுதேவனின் புதல்வர்; வேகத்தில் அவரைப் போன்றவர். தருமம் அறிந்தவரே! நீங்கள் கௌரவிக்கப்பட்டால், அந்த கௌரவத்தை வாயுதேவன் அடைகிறார். ஆகவே, நீங்கள் உபசாரத்திற்கு உரியவர். அத்துடன், நான் சொல்லப் போகும் மற்றொரு காரணத்தையும் கேளுங்கள். ஐயனே! முன்னர் கிருதயுகத்தில் மலைகள் எல்லாம் இறக்கைகளுடன் இருந்தன. (116–122)

Koviloor Digital Library



அதனால், அவைகள் கருடன் போலவும், வாயு போலவும் எல்லாத் திசைகளிலும் பறந்து சென்றன. அவ்வாறு அவைகள் பறக்கும்போது, முனிவர்களும் தேவர் கூட்டங்களும் மற்றுமுள்ள உயிர்ப் பிராணிகளும், 'அவைகள் விழுந்துவிடுமோ?' என்ற சந்தேகத்தில் பயம் அடைந்தார்கள். அதனால், நூறு வேள்விகள் செய்தவனும், ஆயிரம் கண்கள் உடையவனுமான இந்திரன் கோபம் கொண்டு, ஆங்காங்கே பர்வதங்களின் சிறகுகளை வஜ்ராயுதத்தால் ஆயிரக்கணக்கில் வெட்டிப் போட்டான். அந்த தேவராஜன் கோபத்துடன் வஜ்ரத்தைத் தூக்கிக் கொண்டு என்னிடம் வந்தான். உடனே நான், மகாத்மாவான வாயுதேவனால் இந்த உப்புக் கடலுக்குள் தள்ளப்பட்டேன். (123–126)

இந்த உப்புத் தண்ணீரில் தள்ளப்பட்ட நான், எல்லா இறக்கைகளையும் மறைத்துக் கொண்டவனாய், உங்களுடைய தந்தையால் பாதுகாக்கப்பட்டேன். ஆதலால், நான் உங்களை உபசரிக்கிறேன். ஏனென்றால், வாயு என்னால் போற்றத்தக்கவர். உங்களுக்கும் எனக்கும் இடையே இப்படிப்பட்ட சிறந்த உறவு இருக்கிறது. பெருவானரரே! முன்னர் நிகழ்ந்த சம்பவங்கள் இவ்வாறு இருக்கையில், நீங்கள் மனப்பூர்வமாக எனக்கும் கடலரசனுக்கும் திருப்தியைத் தரவேண்டும். (அதாவது, என் கோரிக்கையை ஏற்க வேண்டும்.) வானரப் பெருந்தகையே! இளைப்பாறிக் கொள்ளுங்கள்; உபசாரத்தை ஏற்றுக் கொள்ளுங்கள்; அன்பைப் பெரிதாக நினையுங்கள். உங்களைப் பார்த்ததால் நான் மிகவும் மகிழ்ச்சி அடைந்துள்ளேன்'' என்று சொல்லப்பட்ட அனுமான், அந்த உத்தமமான மலையிடம் கூறினார்— (127–130)

''நான் திருப்தி அடைந்துவிட்டேன்! விருந்துபசாரம் நன்றாகச் செய்யப்பட்டது. (உங்களிடம் தங்க மறுத்ததாலும், மார்பினால் இடித்ததாலும்) என்னிடம் கோபம் கொள்ள வேண்டாம். காரியத்தைச் செய்து முடிப்பதற்காகக் காலம் என்னை விரட்டிக் கொண்டிருக்கிறது. பகற்பொழுதும் போய்க் கொண்டிருக்கிறது. வானரர்களிடம் சூள் உரைத்திருக்கிறேன். ஆகையால், இடையில் இங்கே தாமதிப்பதற்கில்லை'' என்று சொல்லிவிட்டு, மலையைக் கைகளால் கட்டித் தழுவியபின், புன்னகை புரிந்தவாறே, ஆகாயத்தை நோக்கிப் போனார், அனுமான்.

அந்த வாயுகுமாரர், மலை, கடல் ஆகிய இருவராலும் பெருமையுடன் பார்க்கப்பட்டார்; உரிய ஆசீர்வாதங்களாலும் போற்றப்பட்டார். மலை, மாகடல் ஆகிய இரண்டையும் விட்டு, மேலே வெகு உயரத்திற்குத் தாவி, நிர்மலமான ஆகாயத்தில், தந்தையின் வானவெளியில் சென்றார். வாயுகுமாரர், இன்னும் மேலே சென்று, அந்த மைநாக மலையைப் பார்த்துக் கொண்டு, நிர்மலமான வானவெளியில் பிடிப்பு ஏதும் இல்லாமல் சென்றார். பிறரால் செய்ய முடியாததும், அனுமானால் இரண்டாவதாகச் செய்யப்பட்டதுமான (மைநாகத்தை வெற்றி கொள்ளுதல் என்ற) காரியத்தைப் பார்த்து, அங்கேயிருந்த எல்லா தேவர்களும் சித்தர்களும் மாமுனிவர்களும் அவரைப் போற்றினார்கள். (131–137)

தங்கமயமானதும், நல்ல சிகரங்களையுடையதுமான அந்த மலையின் (அனுமானை உபசரித்தல் என்ற) செய்கையால், ஆகாயத்திலிருந்த தேவர்களும் ஆயிரம் கண்ணுடைய இந்திரனும் சந்தோஷப்பட்டார்கள். சசீதேவிக்குப் பதியான இந்திரன் தழுதழுத்த குரலில், நற்சிகரங்களைக் கொண்ட பர்வத சிரேஷ்டனைப் பார்த்து, தானே கூறினான்— ''பொற்சிகரத்தை உடையவனே! மலை முதல்வனே! உன்னிடம் நான் மிகவும் சந்தோஷம் உள்ளவனாக இருக்கிறேன். (138,139)

உனக்கு நான் அபயம் அளிக்கிறேன். நல்லவனே! நீ சௌக்கியமாக இருப்பாய். அச்சப்படுவதற்குப் பல காரணங்கள் இருந்தபோதிலும், சிறிதும் அச்சம் கொள்ளாமல் நூறு யோஜனையைக் கடந்து செல்பவரும், பராக்கிரமம் உடையவருமான அனுமானுக்கு, நீ மிகப்பெரிய உதவி செய்திருக்கிறாய். தசரத குமாரர் இராமனுடைய தூதனாக, இந்த வானரர் செல்கிறார். அவருக்கு நீ மரியாதை செய்ததால், நான் மிகவும் மகிழ்ச்சி அடைந்திருக்கிறேன்.''

Koviloor Digital Library



தேவர்களின் தலைவனும், நூறு யாகங்கள் செய்தவனுமான இந்திரன் மகிழ்ந்ததனால், அந்த மலை மிகவும் சந்தோஷத்தை அடைந்தது. அவரால் வரம் கொடுக்கப்பட்ட அந்த மலையும், அப்போது முதல் மேலேயே நிலைத்து நிற்பதாயிற்று. சிறிது நேரத்தில் அனுமானும் அந்தக் கடற்பிரதேசத்தைக் கடந்து சென்றார். (140–143)

பிறகு, தேவ–கந்தர்வ–சித்தர்கள் சூரியனுக்கு ஒப்பான ஒளிபடைத்த, நாகமாதா சுரஸையிடம் பின்வருமாறு கூறினார்கள்— "வாயுகுமாரரான ஸ்ரீமான் கடலுக்கு மேலே தாண்டிச் சென்று கொண்டிருக்கிறார். அவருக்கு அனுமான் என்று பெயர். மிகவும் பயங்கரமானதும், வானளாவி நிற்கும் மலை போன்றதுமான ராட்சஸ வடிவத்தை ஏற்று, வளைந்த கோரைப் பற்களுடனும், சிவந்த கண்களையுடைய முகத்துடனும் தோன்றி, அவருக்குக் கொஞ்சம் இடையூறு செய். மறுபடியும் அவருடைய பராக்கிரமத்தை அறிய விரும்புகிறோம். (முதலாவதாக, மைநாக நிகழ்ச்சியில் அறிந்துகொண்டோம்.) ஏதேனும் உபாயம் செய்து உன்னை ஜெயிக்கிறாரா? அல்லது, சோகத்தை அடையப் போகிறாரா? (என்று பார்க்கப் போகிறோம்.)" (144–147)

இவ்வாறு சொல்லப்பட்ட அந்த தேவி சுரஸை தேவர்களால் கௌரவிக்கப்பட்டு, நடுக்கடலில் அழகற்றதும் ஒழுங்கில்லாததும் எல்லோருக்கும் பயத்தைக் கொடுக்கக் கூடியதுமான ராட்சஸ உருவத்தை எடுத்துக் கொண்டு, வானத்தில் நீந்திக் கொண்டிருந்த அனுமானைச் சூழ்ந்து கொண்டு இவ்வாறு கூறினாள்— "வானர வீரனே! தெய்வங்களால் நீ எனக்கு உணவாக அளிக்கப்பட்டிருக்கிறாய். நான் உன்னைச் சாப்பிடப் போகிறேன். என்னுடைய இந்த வாய்க்குள் புகுவாயாக." இவ்வாறு சுரஸையால் சொல்லப்பட்ட வானரர், கைகூப்பிக் கொண்டு, இன்முகத்துடன் சுரஸையிடம் கூறினார்— (148–151)

"தசரத குமாரரும் ஸ்ரீமானுமான இராமன், சகோதரனான லட்சுமணனுடனும், மனைவியான வைதேகியுடனும் தண்டகாரண்யத்திற்கு வந்தார். ராட்சஸர்களால் பகை கொள்ளப்பட்ட அவர், வேறு காரியத்தில் (மாரீச மானைப் பின்தொடர்ந்து செல்வதில்) முனைந்திருந்தபோது, அவருடைய மனைவி புகழ் பெற்ற சீதை, இராவணனால் அபகரித்துச் செல்லப்பட்டார். இராமனுடைய உத்தரவுப்படி, அவரிடம் (சீதையிடம்) தூதனாகச் சென்று கொண்டிருக்கிறேன். இராமனுடைய நாட்டில் வசிக்கும் நீ, அவருக்கு உதவி செய்யக் கடமைப்பட்டவள். அல்லது (அவரைப் பற்றி எனக்கு என்ன கவலை? என்று நீ நினைத்தால்), சீதையைப் பார்த்துவிட்டு, தவறுகள் செய்யாத இராமனிடம், அந்தச் செய்தியைத் தெரிவித்த பின்னர், உன் வாயை வந்தடைகிறேன். இது நான் செய்யும் சத்தியம்." (152–155)

அனுமானால் இவ்வாறு சொல்லப்பட்டவளும், இஷ்டப்படி உருவம் எடுக்கக் கூடியவளுமான சுரஸை, "யாரும் என்னை மீறிச் செல்ல முடியாது. இது எனக்குக் கொடுக்கப்பட்ட வரம்" என்றாள். அதைக் காதில் வாங்கிக் கொள்ளாமலே போய்க் கொண்டிருந்த அவருடைய (அனுமானுடைய) பலத்தை அறிய விரும்பிய சர்ப்பங்களின் தாய் சுரஸை சொன்னாள்— "வானரோத்தமனே! இப்போது நீ என் வாய்க்குள் புகுந்து, பின்னர் செல்லலாம். இது, முன்பே பிரும்மாவால் எனக்குக் கொடுக்கப்பட்ட வரம்" என்று கூறி, உடனே முகத்தை மிகவும் அகலமாக்கிக் கொண்டு, அனுமானின் எதிரில் நின்றாள். (156–159)

இவ்வாறு சுரஸையால் கூறப்பட்ட வானரபுங்கவர் கோபம் கொண்டு, "என்னை விழுங்கும் அளவுக்கு உன் வாயைத் திறந்து கொள்" என்றார். பத்து யோஜனை வளர்ந்திருந்த சுரஸையிடம் இவ்வாறு சொல்லிவிட்டு, கோபம் கொண்ட அனுமான் பத்து யோஜனை அகலம் உடையவரானார். மேகத்திற்கொப்பான ஒளி வீசுகின்றவரும், பத்து யோஜனை அகலம் உடையவருமான அவரைப் பார்த்து, சுரஸையும் தன் முகத்தை இருபது யோஜனை அகலமுள்ளதாகச் செய்து கொண்டாள். (160–162)

Koviloor Digital Library



வாயுமைந்தரும் அதிபுத்திசாலியுமான அனுமான், நீண்ட நாக்குடனும், பயங்கரமான நரகம் போன்றதும், அகலப்படுத்தப்பட்டதுமான அவளுடைய முகத்தைப் பார்த்து, உடனே தன்னுடைய உடலை ஒரு கட்டைவிரல் அளவுள்ளதாகச் சுருக்கிக் கொண்டார். விரைவாக அவள் வாய்க்குள் புகுந்து, மிக வேகத்துடன் வெளிப்பட்டு, ஆகாயத்தில் நின்று கொண்டு, வெற்றிச் செல்வியோடு திகழ்ந்த அவர் இவ்வாறு கூறினார்— ''தாட்சாயணி! உனக்கு நமஸ்காரம். உன் வாயில் புகுந்தவனாகிவிட்டேன்! வைதேகி இருக்கும் இடம் நோக்கிப் போகிறேன். உன்னுடைய வரமும் சத்தியமாயிற்று.'' (163–166)

ராகுவின் முகத்திலிருந்து விடுபட்ட சந்திரன் போல, தன் முகத்திலிருந்து வெளியேறிவிட்ட அவரைப் பார்த்து, தன் சொந்த உருவத்துடன் சுரஸா தேவி கூறினாள்— ''வானரசிரேஷ்டனே! அழகனே! காரியத்தை வெற்றிகரமாக முடிப்பதற்காக சௌக்கியமாகச் செல்வீராக. மகாத்மாவான இராகவனுடன் விரைவில் வைதேகியைச் சேர்த்து வையுங்கள்.'' பிறரால் செய்ய முடியாத காரியத்தை, அனுமான் மூன்றாவது தடவையாகச் செய்துவிட்டதைக் கண்டு, 'வாழ்க, வாழ்க' என்று சர்வ பிராணிகளும் வானரரை, அப்போது கொண்டாடின. (167–169)

ஆகாயத்தை அடைந்து, கருடனுக்கு நிகரான வேகத்துடன் சென்றார். ஆகாயத்தில் ஆங்காங்கே மேகங்கள் சஞ்சரிக்கின்றன; பறவைகள் புழங்குகின்றன; தேவலோக இசைவாணரான தும்புரு முதலிய இசை வல்லுநர்கள் சஞ்சரிக்கிறார்கள்; ஐராவதம் வசிக்கிறது; சிங்கம், யானை, புலி, பறவை, சர்ப்பம் முதலியவைகளால் சுமக்கப்படுபவைகளும், குற்றமற்றவைகளும், பறந்து கொண்டிருப்பவைகளுமான விமானங்களால் அழகு செய்யப்பட்டிருக்கிறது; வஜ்ராயுதம், இடி ஆகியவற்றின் உரசலால் ஏற்படும் அக்னிகளால் விளங்குவது;

மிகவும் புண்ணியம் செய்த பாக்கியசாலிகளாலும் சுவர்க்கத்தை ஜெயித்தவர்களாலும் அலங்கரிக்கப்படுகிறது; (வேள்விகளில்) தேவர்களுக்கு அளிக்கப்படும் ஏராளமான அவியை ஏற்றுச் செல்லும் அக்னியால் வசிக்கப்படுவது; கிரகங்கள், தாரகைகள், சந்திரன், சூரியன், நட்சத்திரக் கூட்டங்களால் அலங்கரிக்கப்படுவது; முனிவர் கூட்டம் மற்றும் கந்தர்வ–நாக–யட்சர்களால் சூழப்பட்டது; தனித்தது; நிர்மலமானது; ஆதாரமானது;

விசுவாவசு என்ற கந்தர்வன் உறைவது; தேவராஜனின் யானையால் ஆக்கிரமிக்கப்பட்டது; சந்திர–சூரியர்கள் செல்லும் பாதையாக அமைந்தது; மங்களமானது; உலகத்திற்கு பிரும்மாவினால் செய்யப்பட்ட அஸ்மானகிரி போன்றது; வீரர்களாலும், சிறந்த வித்யாதரக் கூட்டங்களாலும், பலமுறை உபயோகிக்கப்படுவது. (இப்படிப்பட்ட சீர்மிகு) வாயுமார்க்கமான ஆகாயத்தில் கருடனைப் போன்றும், மேகக் கூட்டங்களை இழுக்கும் வாயுவைப் போன்றும் அனுமான் சென்றார். (170–177)

வானரரால் மோதப்பட்ட பெரிய மேகங்கள் கருப்பு–அகில் நிறத்துடனும், சிவப்பு–மஞ்சள்–வெண்மையாகவும் பிரகாசித்தன. மேகக் கூட்டங்களில் மீண்டும் மீண்டும் புகுந்தும் வெளிப்பட்டும் வந்த அவர், மேகக் கூட்டங்களில் புகுந்தும் வெளிப்பட்டும் வரும் மழைக்கால சந்திரன் போல விளங்கினார். வாயுகுமாரரான அனுமான், இறகு முளைத்த பெருமலை போல, எங்கும் காணப்பட்டவராய் பிடிப்பில்லாத ஆகாயத்தை அடைந்தார். (178–180)

தாவிச் சென்று கொண்டிருக்கும் அவரைப் பார்த்து, இஷ்டப்படி உருவம் எடுக்கக் கூடியவளும் பெருத்த உடல் கொண்டவளுமான ஸிம்ஹிகா என்ற ராட்சஸி, மனத்தில் பின்வருமாறு சிந்தித்தாள்— 'இப்போது, வெகு நீண்ட காலத்திற்குப் பிறகு, உணவு கொண்டவளாக ஆகப் போகிறேன். வெகுநாட்களுக்குப் பின் பெரிய இந்தப் பிராணி என் வசத்திற்கு வந்திருக்கிறது!' என்று மனத்தால் சிந்தித்த அவள், அவருடைய நிழலைப் பற்றி இழுத்தாள். தன் நிழல் பிடிக்கப்படுவதை உணர்ந்த வானரர் சிந்திக்கத் தொடங்கினார்— (181–183)

Koviloor Digital Library



'பெருங்கடலில் எதிர்க்காற்றினால் வேகம் தடைபட்ட பெரும் படகு போல, திடீரென்று பராக்கிரமம் குறைக்கப்பட்டவனாக, இழுக்கப்பட்டவனாக இருக்கிறேன்.' வானரர், மேலும் கீழும் பக்கங்களிலும் பார்த்து வந்தபோது, உப்புக் கடலில் எழும்பி நிற்கும் பெரிய பிராணியைப் பார்த்தார். விகாரமான முகத்தையுடைய அதைப் பார்த்த அனுமான், 'வானர மன்னன் சுக்ரீவனால் சொல்லப்பட்ட விசித்திரமான பிராணி அல்லவா?' என்று எண்ணினார். (184–186)

'அவரால் சொல்லப்பட்ட சாயாக்ராஹி இதுதான் என்பதில் சந்தேகமில்லை; நிழலைப் பற்றி இழுக்கக் கூடியது; மிக்க வீர்யமுள்ளது' என்று, நடந்து கொண்டிருந்த காரியத்தினால் அவள் ஸிம்ஹிகை என்ற உண்மையை உணர்ந்து, புத்திமானான வானரர், மழைக்கால மேகம் போல பெரும் சரீரமுடையவராக வளர்ந்தார். ஸிம்ஹிகை, அந்தப் பெருவானரருடைய பெருத்த சரீரத்தைப் பார்த்து, பாதாள குகைக்கு ஒப்பாகத் தன் வாயை விரித்துக் கொண்டாள். மேகக்கூட்டம் போல் கர்ஜித்துக் கொண்டு, வானரரை நோக்கி ஓடினாள். (187–189)

அவர், தன் உடல் அளவுக்கு வளர்ந்திருந்த அவளுடைய அகலமான மிகப்பெரிய வாயைப் பார்த்தார். மகாவானரரான அவர் தன் உயிர்நிலைகளைச் சுருக்கிக் கொண்டு, அவளுடைய அகலமான வாயினுள் வஜ்ராயுதம் போல் மிக வேகமாகப் பாய்ந்தார். பௌர்ணமி நாளைய பூர்ண சந்திரன் ராகுவால் விழுங்கப்படுவதைப் போல, அவளுடைய வாயில் மூழ்கிக் கொண்டிருக்கும் அவரை (அனுமானை) சித்த–சாரணர்கள் பார்த்தார்கள். உடனே, கூர்மையான தன்னுடைய நகங்களால் அவளுடைய உயிர்நிலைகளைப் பிளந்து, மனோவேகம் போன்ற ஆற்றலுடைய அவர் வேகமாக வெளியே தாவினார். (190–193)

அறிவினாலும் தைரியத்தாலும் செயல்திறனாலும் அவளை வீழ்த்திவிட்டு மனத்திண்மை பெற்ற அனுமான், உடனே மறுபடியும் தன் சரீரத்தை வளர்த்துக் கொண்டார். அனுமானால் மார்பு பிளக்கப்பட்ட அவள், அலறிக் கொண்டு தண்ணீரில் விழுந்தாள். அவளுடைய அழிவுக்காகவே பிரும்மாவால் படைக்கப்பட்டவர், இந்த அனுமான். அந்த ஸிம்ஹிகையானவள் அவரால் விரைவாகக் கொல்லப்பட்டு வீழ்ந்ததைப் பார்த்து, ஆகாயத்தில் சஞ்சரித்துக் கொண்டிருந்த பூதங்கள், வானரோத்தமரான அவரிடம் இவ்வாறு சொன்னார்கள்— (194–196)

''தாண்டுகிறவர்களுள் முதல்வனே! பயங்கரமான காரியத்தை, இப்போது நீ செய்திருக்கிறாய்! பெரிய இந்தப் பிராணியைக் கொன்று போட்டாயே! நீ ஏற்றுக் கொண்டிருக்கும் காரியத்தை வெற்றிகரமாக முடித்து விட்டு வா. வானரேந்திரா! தைரியம், தொலைநோக்கு, சட்டென்று முடிவெடுக்கும் துணிவு, செயல்திறன் ஆகிய நான்கும் எவரிடம் இருக்கின்றனவோ, அவர் காரியங்களில் தோற்று வருத்தம் அடைய மாட்டார்.'' மதிக்கத்தக்க அவர்களால் கொண்டாடப்பட்டவரும், நினைத்த காரியத்தை முடித்துக் கொண்டுவிட்டவருமான அந்த வானரர், கருடனைப் போல் வேகமாக ஆகாயத்தில் புகுந்து சென்றார். (197–199)

அநேகமாகக் கடலைத் தாண்டிவிட்ட அவர், சுற்றும்முற்றும் பார்த்து வருகையில், நூறு யோஜனை முடியும் எல்லையில் மரக்கூட்டங்களைக் கண்டார். கீழே இறங்கும்போதே, பல வகையான மரங்களால் அலங்கரிக்கப்பட்ட தீவையும் மலயமலையின் நந்தவனங்களையும் பார்த்தார், அனுமான். பெருங்கடலையும், கடலோரத்தையும், கடலோரத்தில் வளர்ந்திருந்த மரங்களையும், கடலின் பத்தினிகளான நதிகள் சங்கமிக்கும் முகத்துவாரங்களையும் பார்த்தபடியே, மிகப்பெரிய மேகம்போல் ஆகாயத்தைத் தடுத்துக் கொண்டிருக்கும் தன் சரீரத்தைப் பற்றி ஆலோசித்து, அவர் ஒரு நல்ல முடிவுக்கு வந்தார். (200–203)

'என்னுடைய பெரிய சரீரத்தையும் அதிவேகத்தையும் பார்த்தவுடனேயே, ராட்சஸர்கள் என்னைப் பற்றி அறிந்து கொள்ளத் துடிப்பார்கள்' என்று அனுமான் எண்ணினார். உடனே, மலை போன்றிருந்த தன் உடலைச் சுருக்கிக் கொண்டு, மோகம் முதலான மாசுகளைக்

Koviloor Digital Library



களைந்துவிட்ட ஆத்மஞானி போல், தன் இயற்கையான வடிவத்தை அடைந்தார். அந்த (மிகப்பெரிய) வடிவத்தை மிகவும் சுருக்கிக் கொண்டு, இயல்பான வடிவத்தில் நின்ற அனுமான், பலிச்சக்கரவர்த்தியின் வீர்யத்தைப் பறிப்பதற்காக மூன்று அடி நடந்த வாமனரைப் போல் திகழ்ந்தார். (உருவத்தின் அளவுதான் சுருங்கியதே தவிர, இயற்கையான பேராற்றல் சுருங்கவில்லை – என்றபடி.) (204–206)

அழகான பலவித உருவங்களை எடுக்கக் கூடியவரும், பெருங்கடலின் அக்கரையை அடைந்து பிறரால் வெல்ல முடியாதவரும், சுருங்கிய வடிவமுடையவரும், மாபெரும் மலையின் சிகரம் போன்றவருமான அந்த மகாத்மா, இனிமேல் நடக்க வேண்டியதைப் பற்றி தீர்மானித்துக் கொண்டவராக, செழிப்பானதும், தாழை–நருவிலி–தென்னை மரங்கள் ஏராளமாக விளங்குவதுமான லம்பம் என்ற மலையின் சிகரத்தில் இறங்கினார். (207,208)

பெருங்கடலின் அக்கரையை அடைந்துவிட்ட அவர், சிறந்த மலையின் மேல் விளங்கும் இலங்கையைப் பார்த்துக் கொண்டு, பழைய உருவத்தை விட்டுவிட்டு, பறவை–விலங்குகளைக் கலங்கச் செய்தவராக, அந்த லம்ப மலையில் இறங்கினார். பேரலைகள் வீசும் பெருங்கடலைத் தன் பலத்தினால் கடந்து வந்து, பெருங்கடலின் கரையில் குதித்து, அமராவதிப் பட்டணம் போல் விளங்குவதும், அரக்கர்களும் நாகர்களும் நிறைந்ததுமான இலங்கையைப் பார்த்தார், அனுமான். (209,210)

**ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் சுந்தர காண்டத்தில்**
**முதலாவது ஸர்க்கம் முற்றிற்று.**

# ஸர்க்கம் : இரண்டு
## இரவில் இலங்கையில் நுழைதல்

மகாபலசாலியான ஆஞ்சநேயர் ஒருவராலும் தாண்ட முடியாத பெருங்கடலைக் கடந்து வந்து, சிறிதும் சிரமமில்லாமல், திரிகூட மலையின் சிகரத்தில் அமைந்திருந்த இலங்கையைக் கண்டார். அப்போது வீர்யவானான அவர், மரங்களால் உதிர்க்கப்பட்ட மலர்மாரியால் மூழ்கடிக்கப்பட்டு, புஷ்பங்களால் ஆனவர் போலவே காணப்பட்டார். ஸ்ரீமானும் மிகவும் பராக்கிரமம் உள்ளவருமான ஆஞ்சநேயர், நூறு யோஜனை தூரத்தைக் கடந்து வந்தும்கூட பெருமூச்சு விடவில்லை; வாட்டம் அடையவில்லை. '(இன்னும்) எத்தனையோ நூற்றுக்கணக்கான யோஜனை தூரத்தையும் நான் கடந்து செல்வேன்! பின்னே, நூறு யோஜனை என்ற அளவுக்கு உட்பட்ட இந்தக் கடல் எம்மாத்திரம்!' (1–4)

வீரர்களுள் வீரர்; தாண்டுகிறவர்களிலும் முதன்மையான அவர், மாபெருங்கடலைத் தாண்டிவிட்டு, விரைவாக இலங்கையையும் அடைந்தார். நீளமான புல்புதர்கள், மணம் பெருக்கும் காடுகள், சிறு பாறைகளுடன் கூடிய சிறு மலைகள் – இவைகளுக்கு இடையே சென்றார். தேஜஸ்வியும் வானர முக்கியஸ்தருமான அனுமான், மரங்களால் மறைக்கப்பட்ட மலைகளையும், பூத்துக் குலுங்கும் காடுகளின் வரிசைகளையும் கடந்து சென்றார். வாயுகுமாரரான அவர், அந்த மலையில் நின்று கொண்டு, சுற்றிலுமிருந்த காடுகள்–நந்தவனங்களையும், மலை முடியில் நிற்கும் இலங்கையையும் ஒரே வீச்சில் கண்டார். (5–8)

தேவதாரு, கோங்கு, பேரீச்சை, நன்றாக மலர்ந்திருந்த முரளி, எலுமிச்சை, மலை மல்லிகை, தாழை, மணம் மிகுந்த பிரியங்கு, கடம்பம், ஏழிலைப்பாலை, மருதை, மலைச்சாத்தி, மலர்ந்த

Koviloor Digital Library



அரளி முதலான பலவகை புஷ்பங்களோடு கூடினதும், மொட்டுக்கள் இருந்தனவும், பறவைகளால் சூழப்பட்டதும், பெருங்காற்றினால் அசைக்கப்பட்ட கிளை நுனிகளை உடையதுமான மரங்களையும்; அன்னம்–நீர்க்காக்கைகளால் சூழப்பட்டதும், செந்தாமரை–நீலோத்பலம் போன்ற மலர்கள் உடையதுமான ஓடைகளையும்; ரம்மியமான விளையாடும் இடங்களையும்; எல்லா ருதுக்களிலுமுள்ள மலர், பழம் கொடுக்கும் பலவித மரங்களால் சூழப்பட்ட நீர்நிலைகளையும்; அழகிய தோட்டங்களையும் அனுமான் பார்த்தார். (9–13)

இராவணனால் ஆட்சி செய்யப்பட்ட இலங்கை, தாமரை, நீலோத்பலம் (ஆகிய மலர்கள்) பூத்திருந்த அகழிகளால் சூழப்பட்டிருந்தது. இராவணனால் சீதை கவர்ந்து வரப்பட்டதால், (அவள் அந்த நகரத்தில் ஏதோ ஓர் இடத்தில் வைக்கப்பட்டிருப்பதால்) இஷ்டப்படி உருவம் எடுக்கக்கூடியவர்களும், எல்லாப் பக்கங்களிலும் திரிந்து கொண்டிருப்பவர்களும், கொடிய வில்லாளிகளுமான ராட்சஸர்களால் நன்றாகக் காவல் காக்கப்பட்டது. அழகிய தங்கமயமான மதிற்சுவர்கள் அந்தப் பெருநகரத்தைச் சுற்றி இருந்தன; கிரகங்களைப் போலும், சரத்கால மேகம் போலும் உயரமாக அமைக்கப்பட்ட வெண்மையான வீடுகள் இருந்தன; நூற்றுக்கணக்கான போர்ப்பயிற்சி மைதானங்கள் இருந்தன; பாவட்டாக்களும் கொடிகளும் நிறைந்திருந்தன; கொடி வரிசைகள், அழகாக எழுதப்பட்டிருந்த பொன்மயமான தோரணங்கள் ஆகியவை ஒளி வீசிக் கொண்டிருந்தன. இப்படிப்பட்ட வானலோகத்து தேவர்கள் பட்டணமான அமராவதி போன்ற இலங்கையைப் பார்த்தார், அனுமான். (14–18)

திரிகூட மலையின் உச்சியில், மங்களமான, வெண்மையான மாளிகைகள் நிரம்பிய இலங்கை, ஆகாயவெளியில் உள்ள ஒரு பட்டணம் போல் விளங்குவதை, ஸ்ரீமானான வானரர் பார்த்தார். இராவணனால் ஆளப்படுவதும், விசுவகர்மாவினால் அமைக்கப்பட்டதும் ஆகாயத்தில் மிதப்பதைப் போல் தோன்றுவதுமான அந்த நகரத்தைப் பார்த்தார், அனுமான். (19,20)

விசுவகர்மாவினால் மனப்பூர்வமான உற்சாகத்தோடு உண்டாக்கப்பட்ட ஒரு மடந்தையைப் போலிருந்த இலங்கையின் மதிற்சுவர்களின் அடிப்பாகத்தில் அமைந்திருந்த திண்ணைகளே, உடலின் இடைபாகம்; தூய நீர் நிறைந்த அகழிகளே புதிய ஆடை; மதிற்சுவர் மேல் வைக்கப்பட்டிருந்த பீரங்கி, சூலம் முதலியவைகளே கேசபாரம்; போர்க்கால உபயோகத்திற்காக மதிற்சுவரில் ஒதுக்கப்பட்டிருந்த இடங்களே ஆபரணங்கள். அதன் வடக்கு வாசலை அடைந்த ஆஞ்சநேயர் (மேற்கொண்டு செய்ய வேண்டிய காரியம் பற்றிச்) சிந்திக்கலானார். (21,22)

கைலாச சிகரம் போன்றதும், ஆகாயத்தைத் தொடுவது போன்றதும், மிக உயரமான உத்தம மாளிகைகளால் ஆகாயத்தில் பறப்பது போலிருந்ததும், சர்ப்பங்களால் போகவதீ நகரம் காக்கப்படுவதைப் போல, பயங்கரமான ராட்சஸர்களால் நிரம்பியிருந்ததும், கற்பனைக்கும் எட்டாததும், நன்றாக அமைக்கப்பட்டதும், ஒழுங்காக இருந்ததும், முன்பு குபேரன் வசித்ததும், மகாவிஷம் கொண்ட சர்ப்பங்களால் காக்கப்படும் மலைக்குகையைப் போல், சூலம்–பட்டிசம் ஏந்திய கோரைப் பற்களைக் கொண்ட சூரர்களான ராட்சஸர்களால் பாதுகாக்கப்படுவதுமான இலங்கையையும், திட்டமாக அமைக்கப்பட்ட காவல் கட்டுப்பாடுகளையும், சுற்றியிருந்த பெருங்கடலையும், பயங்கரமான விரோதி இராவணனையும் எண்ணிப் பார்த்து, வானரர் பெருங்கவலைக்கு உள்ளானார். (23–26)

'வானரர்கள், இங்கே வந்தாலுமே பலனை அடையாமல் போவார்கள். தேவர்களாலும் யுத்தம் செய்து வெற்றி கொள்ளக்கூடியது அல்ல, இலங்கை. இராவணன் ஆட்சி செய்வதும், நுழைய முடியாத அரண்களைக் கொண்டதுமான இந்த இலங்கையை, புஜபலபராக்கிரமசாலியான அந்த இராகவனே வந்தடைந்தாலும், அவர் என்ன செய்வார்? (தமோ குணமுள்ள) ராட்சஸர்களுடன் சமாதானம் என்ற பேச்சுக்கே இடமில்லை; செல்வச் செழிப்புடன் இருப்பதால் தானத்திற்கும்

Koviloor Digital Library



இடமில்லை; மிகுந்த பலபராக்கிரமங்களில் இறுமாப்புக் கொண்டிருக்கும் இவர்களிடையே பேதம் விளைவிக்கவும் முடியாது; அறிவும் ஆற்றலும் கொண்டவர்களாதலால், யுத்தம் என்ற உபாயமும் இங்கே பயன்படாது. (27–29)

வானரர்களுள் மகாத்மாக்களான நால்வருக்குத்தான் – வாலி மைந்தன் அங்கதன், நீலன், நான், அறிவிற்சிறந்த அரசன் சுக்ரீவன் ஆகியவர்களுக்குத்தான் – இங்கு வரக்கூடிய திறன் உண்டு. வைதேகி உயிரோடு இருக்கிறாரா, இல்லையா? என்பதை முதலில் தெரிந்து கொள்கிறேன். ஜனககுமாரியைப் பார்த்த பிறகு, இவைகளைப் பற்றியெல்லாம் ஆலோசிக்கலாம்.' பின்னர், சிறிதுநேரம் மலைச்சிகரத்தில் உட்கார்ந்து கொண்டு, இராமனுடைய க்ஷேமத்தில் நோக்கமுடைய வானரவேழமான அவர் சிந்திக்கத் தொடங்கினார். (30–32)

கொடியவர்களும், ஆற்றல் படைத்தவர்களுமான ராட்சஸர்களால் காவல் காக்கப்படுவதுமான இந்த ராட்சஸ நகரத்தில், என்னுடைய இதே உருவத்தோடு நுழைய முடியாது. அரக்கர்கள் எல்லோரும் பேராண்மை உடையவர்கள்; மகாவீரர்கள்; பலசாலிகள். எனவே, ஜானகியைத் தேடுகிற என்னால் ஏமாற்றத்தக்கவர்கள். (நேரான வழியைக் கடைப்பிடித்தால், வந்த காரியம் கெட்டுப் போகும் – என்றபடி.) (33,34)

(பிறரால் பார்க்கப்படக்கூடிய பெரிய உருவத்துடன் சென்றால், ராட்சஸர்கள் என்னைக் கண்டு கொள்வார்கள்; யார் கண்ணிலும்படாத மிகச்சிறிய உருவத்தை எடுத்துக் கொண்டால், இலங்கை முழுவதையும் சுற்றிப் பார்க்க முடியாது. ஆகவே,) கண்ணுக்குப் புலப்படாத உருவத்தில், இரவு நேரத்தில் இலங்காபுரியினுள் புகுவதற்கும், மகத்தான அருஞ்செயலை நிறைவேற்றுவதற்கும் தக்க தருணம் வந்துள்ளது. தேவாசுரர்களாலும் வெற்றி கொள்ள முடியாத அப்படிப்பட்ட நகரத்தைப் பார்த்து, மிகவும் கவலையோடு பெருமூச்சுவிட்டுக் கொண்டு சிந்தனையில் ஆழ்ந்தார், ஆஞ்சநேயர். (35,36)

தீயவனும், ராட்சஸ மன்னனுமான இராவணனால் பார்க்கப்படாமல், ஜனகரின் புதல்வியான மைதிலியை, நான் எந்த உபாயத்தால் காண்பேன்? உலகப் புகழ்பெற்ற இராமனுடைய காரியம் கெட்டுப் போகாமலிருக்க (அதற்கேற்றபடி), ஜனககுமாரியை வேறு ஒருவரும் இல்லாத நேரத்தில், நான் பார்ப்பதற்கு வழி என்ன? விவேகமில்லாத தூதனிடம் ஒப்படைக்கப்பட்ட காரியங்கள், இடம்–காலம் வேறுபட்டுவிட்டால், முடியும் தறுவாயில் உள்ளவைகூட, அவனால் தகுந்தபடி நடந்துகொள்ள முடியாததால், சூரியோதய கால இருள்போல் அழிந்துபோகின்றன. (37–39)

செய்யத்தக்கது–செய்யத்தகாதது என்று (தீர்க்காலோசனைக்குப்பின், யஜமானரால்) முடிவு செய்யப்பட்டவைகளும்கூட, (விவேகமில்லாத தூதனிடம் ஒப்படைக்கப்பட்ட காரியங்கள்) வெற்றி அடைவதில்லை. தங்களை மகாபுத்திசாலிகள் என்று நினைத்துக் கொள்ளும் தூதர்கள், காரியங்களை அழித்து விடுகிறார்கள். காரியம் எவ்வாறு கெட்டுப் போகாமலிருக்கும்? அச்சம் எப்படி ஏற்படாமலிருக்கும்? பெருங்கடலைத் தாண்டி வந்ததும் எப்படி வீணாகிப் போகாமலிருக்கும்? ராட்சஸர்களால் நான் பார்க்கப்பட்டால், இராவணனுடைய அழிவை விரும்புகிறவரும், உலகப் புகழ் பெற்றவருமான இராமனுடைய இந்தக் காரியம் உருப்படாமற்போகும். (40–42)

நான் ராட்சஸ வடிவத்தை எடுத்துக் கொண்டாலும், ராட்சஸர்களால் அறியப்படாமல் ஒருக்காலும் இருக்கவே முடியாது; வேறு உருவத்தை எடுத்துக் கொண்டால், என்னை மிகச் சுலபமாகக் கண்டுபிடித்து விடுவார்கள் என்பதைச் சொல்லவும் வேண்டுமா? இங்கு, காற்றுகூட பிறரால் அறியப்படாமல் வீச முடியாது என்று நான் திடமாக எண்ணுகிறேன். பெரும்பலசாலிகளான அரக்கர்களால் அறியப்படாத எதுவும் இங்கு இல்லை. நான், இங்கு என்னுடைய இந்தப் பெரிய சுயரூபத்தோடு நின்று கொண்டிருந்தேனேயானால் நாசத்தை அடைவேன்; தலைவருடைய காரியமும் கெட்டுப் போகும். (43–45)

Koviloor Digital Library



ஆகவே, என்னுடைய சுயவடிவத்தை (இந்த வானர வடிவத்தை)ச் சுருக்கிக் கொண்டு, இராகவனுடைய லட்சியம் நிறைவேறுவதற்காக (இரவு நேரத்தில்) இலங்கைக்குள் புகப் போகிறேன். நெருங்க முடியாத இராவணனுடைய பட்டணத்திற்குள் இரவில் புகுந்து, எல்லா மாளிகைகளிலும் ஜனக குமாரியைத் தேடிப் பார்க்கப் போகிறேன். இவ்வாறு, ஆலோசித்து முடிவு செய்த அந்த வீர வானரர் அனுமான், வைதேகியைக் காண்பதில் துடிப்புடையவராக, சூரியன் மறைவதை எதிர்பார்த்துக் கொண்டிருந்தார். சூரியன் அஸ்தமித்து இரவு வந்தவுடன் மாருதி, தன் உடலை ஒரு பூனையளவுக்குச் சுருக்கிக் கொண்டு ஆச்சரியப்படத்தக்க விதமாக விளங்கினார். (46–49)

பிரதோஷ காலத்தில், வீர்யவானான அனுமான் வேகமாகத் தாவி, செம்மையாக வகுக்கப்பட்ட நெடுஞ்சாலைகளை உடையதும் அழகியதுமான பட்டணத்திற்குள் பிரவேசித்தார். அந்த நகரத்தில், மாளிகைகள் வரிசையாக இருந்தன. ஸ்படிகத்தால் தளவரிசை செய்யப்பட்டு, சுவர்ணத்தால் இழைக்கப்பட்ட தரைகளாலும் தங்க–வெள்ளித் தூண்களாலும் தங்கச்சாளரங்களாலும் நிறைந்த ஏழு மாடிக் கட்டடங்களும், எட்டு மாடிக் கட்டடங்களும் அமைக்கப்பட்ட கந்தர்வ நகரத்திற்கு ஒப்பானதுமான பெரும் பட்டணத்தை அவர் பார்த்தார். அங்கு ராட்சஸர்களுடைய மாளிகைகள் வைடூர்யமணிகளால் அலங்கரிக்கப்பட்டு, ஏராளமான முத்துக்களால் இழைக்கப்பட்டதுமான தளவரிசைகளால் சிறப்பாக விளங்கின. நாற்புறத்திலும் அலங்கரிக்கப்பட்ட விசித்திரமான தங்கத் தோரணங்கள், ராட்சஸ நகரத்தைப் பிரகாசப்படுத்திக் கொண்டிருந்தன. (50–54)

நினைத்துப் பார்க்க முடியாததும், அற்புதமான வடிவம் உடையதும், வெண்மை நிறமுள்ள மாடிகளின் வரிசையை உடையதும், விலைமதிக்க முடியாத பொற்சாளரங்களையுடைய நுழைவாயிலை உடையதும், கீர்த்தி வாய்ந்ததும், இராவணனுடைய புஜங்களால் பாதுகாக்கப்படுவதும், பயங்கரமான பலம் கொண்ட இராச்சுற்றிகளான ராட்சஸர்களால் சூழப்பட்டதுமான இலங்கையைக் கண்டு, (இவ்வளவு கட்டுப்பாடான நகரத்தில் நான் எவ்வாறு சீதையைத் தேடுவேன்? என்று) அனுமான் கவலை அடைந்தார். வைதேகியைப் பார்ப்பதில் உள்ள ஆர்வத்தால் சந்தோஷமும் அடைந்தார். (55,56)

சந்திரனும், இவருக்கு உதவி செய்வதைப் போல, நட்சத்திரக்கூட்டங்களின் நடுவில் பிரகாசித்துக் கொண்டு, ஒளிக் குடையால் உலகத்தைப் பிரகாசப்படுத்தியவாறு ஆயிரக்கணக்கான கிரணங்களுடன் உதயமாகிறான். (உதயமானான் – என்றபடி.) வெண்சங்கு போன்ற காந்தி உள்ளதும், பால் மற்றும் தாமரைத் தண்டுகளின் நிறத்தை வெளிப்படுத்துவதும், உயரே சென்று கொண்டு மிகவும் ஒளி வீசுவதும், ஏரியில் நீந்தும் அன்னப்பறவையைப் போல் விளங்குவதுமான சந்திரனைப் பார்த்தார், வானர வீரர். (57,58)

**ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் சுந்தர காண்டத்தில்**
**இரண்டாவது ஸர்க்கம் முற்றிற்று.**

# ஸர்க்கம் : மூன்று

## இலங்காதேவியை ஜெயித்தல்

வாயுகுமாரரும் மகாபலசாலியும் பேரறிவாளருமான அனுமான், தொங்குகின்ற மேகம் போன்றதும், அகலமான முடிப்பகுதியை உடையதுமான லம்பம் என்னும் மலையில் அமைந்ததும், அழகிய வனம்–நீர்நிலைகள் உடையதும், இராவணனால் பாதுகாக்கப்பட்டதுமான இலங்கைக்குள் இரவு வேளையில் நுழைந்தார். (1,2)

Koviloor Digital Library



அனுமான் சமுத்திரத்தைத் தாண்டுகையில்
'மைநாக பர்வதம்' மேல் எழும்புதல்

Koviloor Digital Library



சீதாதேவி, 'இராகவனிடம் கொடுப்பாயாக!' என்று கூறி,
அனுமானிடம் சூடாமணியைக் கொடுத்தல்

Koviloor Digital Library




**விபீஷணனின் சரணாகதி**

ஸக்ருதே3வ ப்ரபந்நாய தவாஸ்மீதி ச யாசதே ।
அப4யம் ஸர்வபூ4தேப்4யோ த3த3ாம்யேதத்3வ்ரதம் மம ॥

(யுத்த காண்டம் 18/32)

Koviloor Digital Library




'ஸ்ரீராம்' என்ற சொல்லின் மகிமையினால், வானரர்கள் கற்களால் 'ஸேது பாலம்' அமைக்கிறார்கள்.

Koviloor Digital Library



இராம-இராவண கோர யுத்தம்

Koviloor Digital Library



அரசவையில் குச-லவர்கள் 'இராம காவியம்' இசைப்பதை, ஸ்ரீராமன் கேட்கிறார்.

Koviloor Digital Library



ஸ்ரீராமன், தங்கத்தால் செய்த சீதாதேவி பிரதிமையுடன் 'அசுவமேத யாகம்' செய்கிறார்.

Koviloor Digital Library

ஸ்ரீராமன், தன்னுடன் அயோத்தியில் உள்ள சகல ஜீவராசிகளையும்
சரயூ நதி வழியாக, வைகுண்டத்திற்கு அழைத்துச் செல்கிறார்.

Koviloor Digital Library



சரத்கால மேகம் போன்ற வெண்மையான மாளிகைகளால் சோபிப்பது; பெருங்கடலின் பேரிரைச்சலைப் போன்று பேரொலியோடு விளங்குவது; கடற்காற்று வீசுவது; வலிமை பொருந்திய படைவீரர்களால் பாதுகாக்கப்படுவது; அளகாபுரியைப் போன்றது; அழகிய தோரணவாயில்களில் மதயானைகள் நிறுத்தப்பட்டிருப்பது; வெண்மையான நுழைவாயில்களை உடையது; சர்ப்பங்கள் வாழும் போகவதீ நகரத்தைப் போல் மிகவும் காவல் உள்ளது; மங்களமானது; மின்னல் கொடிகளுடன் கூடிய மேகக்கூட்டங்களால் சூழப்பட்டது; ஒளிப்பிழம்புகளால் பிரகாசமாக இருப்பது; குளிர்ந்த காற்று மெதுவாக வீசிக் கொண்டிருப்பது; அமராவதிப் பட்டணத்தைப் போன்றது; தங்கமயமான பெரும் மதிற்சுவர்களால் சூழப்பட்டது; பொருத்தப்பட்ட சிறுமணிகளின் ஒலியுடன் கூடிய கொடிக்கம்பத்தினால் அலங்கரிக்கப்பட்டது – இத்தகைய இலங்காபுரியை அடைந்து, மனமகிழ்ச்சியுடன் மதிற்சுவரின் மேல் விரைவாக ஏறினார், அனுமான். (3–7)

அந்த நகரத்தை நானாபக்கத்திலிருந்தும் மிக்க ஆச்சரியத்துடன் பார்த்தார். தங்கமயமான வாயிற்படிகள்; வைடூர்யத்தால் செய்யப்பட்ட மேடைகள்; வைரம், ஸ்படிகம், முத்து, இரத்தினங்களால் அமைக்கப்பட்ட திண்ணைகள்; உருக்கிய தங்கத்தால் செய்யப்பட்ட யானைச் சிற்பங்கள்; மாசுமறுவற்ற வெள்ளி போன்ற வெண்மையான வைடூர்யம் இழைக்கப்பட்ட படிக்கட்டுக்கள்; இடைவெளிகளில் ஸ்படிகப் பொடியின் பூச்சு; நாற்புறங்களிலும் அழகிய தாழ்வாரங்கள்; ஆகாயத்திலிருந்து விழுந்ததைப் போலிருப்பது; மங்களகரமானது; கிரௌஞ்சம்–மயில்களின் அகவல்கள் கூடியது; அரச அன்னங்கள் வசிப்பது; இசைக்கருவிகள், அணிகலன்களின் ஓசைகள் எங்கும் எதிரொலிக்கப்படுவது; குபேரபுரியின் மறுபதிப்புப் போன்றது; ஆகாயத்தில் தோன்றியதைப் போன்றது – இப்படிப்பட்ட இலங்காபுரி பட்டணத்தைப் பார்த்த அனுமான் மிகவும் சந்தோஷித்தார். (8–12)

அரக்க மன்னனின் பட்டணமான மிகச்சிறந்த, மிகச்செழுமையான, மங்களமான அந்த இலங்கை நகரத்தைப் பார்த்து, வீர்யவானான அனுமான் சிந்திக்கத் தொடங்கினார். 'கையில் ஆயுதம் தாங்கி எப்போதும் விழிப்புடன் இருக்கும் இராவணனின் சைன்யத்தால் காவல் புரியப்படும் இந்த நகரம், வேறு எவராலும் கைப்பற்ற முடியாதது. குமுதன், அங்கதன், மகாவானரனான சுஷேணன், மைந்தன், த்விவிதன் ஆகியோரால் ஒருக்கால் இவ்விடத்திற்கு வர முடியலாம். சூரிய குமாரன் சுக்ரீவன், குசபர்வன் என்ற வானரன், ஜாம்பவான், கேதுமாலன், நான் இவர்களால்தான் இந்த நகரத்திற்கு வர முடியும்.' (13–16)

பெருந்தோளரான அனுமான், இராகவனுடைய பராக்கிரமத்தையும் இலட்சுமணனுடைய பேராற்றலையும் எண்ணிப் பார்த்து மிகவும் திருப்தி அடைந்தவரானார். (அவர்களாலும் இங்கு வரக்கூடும் என்று நம்பிக்கை கொண்டார்.) அந்தச் செழுமையான இலங்கைப் பட்டணம், அலங்கரிக்கப்பட்ட ஒரு பெண்ணைப் போலிருந்தது. இலங்கை என்னும் பெண்ணுக்கு இரத்தினமயமான பிரகாரங்களே, ஆடைகள்; பசு–குதிரை கட்டும் தொழுவங்களே, காதணிகள்; ஆயுதசாலைகளே, நகில்கள். தீபங்களாலும் மிகவும் ஒளிவீசும் மாளிகைகளாலும் இருள் விலகிப் போயிருந்த ராக்ஷஸேந்திரனுடைய நகரத்தைப் பார்த்தார், அனுமான். (17–19)

அப்போது, இலங்கை நகர தேவதை, மகாபலம் பொருந்தியவரும், வானரர்களுள் சிங்கம் போன்றவருமான சுயஉருவத்தோடுகூடிய வாயுகுமாரர் உள்ளே நுழைவதைப் பார்த்தாள். இராவணனால் பாதுகாக்கப்பட்டவளும், பயங்கரமான முகத்துடன் கூடியவளுமான இலங்கை தேவதை, வானர சிரேஷ்டரைப் பார்த்து, தானே எழுந்து வந்தாள். (இலங்கா தேவி) அனுமானின் எதிரில் வந்து நின்றாள். பெரும் சப்தத்தை எழுப்பிக் கொண்டு வாயு மைந்தரை நோக்கிக் கேட்டாள்— (20–22)

"வனத்தில் வசிப்பவனே! யார், நீ? எந்த வேலையாக இங்கு வந்திருக்கிறாய்? உடலில் உன் பிராணன் (உயிர்) இருக்கும்போதே, இப்பொழுதே உண்மையைக் கூறிவிடு. வானரரே!

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library